Registered No. 1514] [April 1927.



# செங்குந்த மித்திரன்.

SENGUNTHA MITHRAN

உள்ளுறை


கைக்கோளரும் பெயரும் ௧௧௬
முயற்சியும் கடமையும் ௧௨௭
பயமெனும் பேய் [illegible]
நெசவுத் தொழில் ௧௩௫
சுகஜீவனம் ௧௩௬
முன்னேற்ற வழி ௧௩௮
குடியால் விளையும் கெடுதி ௧௪௧
ஒழுக்கம் உயர்வு ௧௪௭
காஞ்சி மகாநாடு ௧௫0
காந்தியடிகள் நல்லுரை ௧௫௬



ஆசிரியர்

காஞ்சி நாகலிங்க முனிவர்



பிரபவ ௵ சித்திரை மீ
1927.




...blisher:—T. N. Sapapath...

உ

முருகன் துணை


# சேங்குந்த மித்திரன்

மாதப்பத்திரிகை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

| தொகுதி - க | பிரபவஹூ சித்திரைமீ | பகுதி - ச |
| --- | --- | --- |



25 APR 1927 MADRAS


வேலுமயிலுந் துணை

*மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு*
*மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்*
*சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ*
*நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.*

---

## கைக்கோளரும் கற்பிதப் பெயரும்

[**ஆசிரியர் காஞ்சி நாகலிங்க முனிவர்**]

கைக்கோளர் என்னும் பெயர்க்குப் பொருளாவது ஒழுக்கத்தின்கோள்கையோர் என்பதாம். அவ்வொழுக்கம் வைதிகவொழுக்கம் இலவுகிகவொழுக்கம் எனப் பெயர்பெற்று இருவகைப்படும். இவ்விருவகை யொழுக்கத்தினையும் கைக்கோளக் குலமக்கள் ஏற்றுளோராதலால் பிற்காலத்தவர் நூல்களுள் அவர்களுக்குத் தந்துவாயர் என்றும் காருகர் என்றும் இருபொருளொட்டுச் செயற்கைப் பெயர்களையும்,—

*"காலத்திற் கேற்பக் கவியரசர் கற்பித்தல்*
*சாலப் பொருத்தமெனச் சாற்று."* பாமததிமிரபானு

எனக் கற்பித்து வைத்தனர்.

பொருள்களெல்லாம் இயற்கைப் பொருள் செயற்கைப்பொருள் என இருவகைப்படும். அவற்றுள்,—

"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்." தொல்காப்பியம்

என்ற [illegible] சூத்திரத்தில் இயற்கைப்பொருள் 'ஆக்கமும் காரணமும் இன்றித் தனக்குப் பின் தோன்றாமல் தான் தோன்றிய போது உடன் தோன்றிய தன்மையை யுடையது' என்று பொருள்படும். இயற்கை - விகாரம் இல்லது. இதனை வட நூலார் 'அவிகாரம்' என்று கூறுப.

செயற்கைப் பொருள் 'காரணச்சொல் முன் வரவும் ஆக்கச் சொல் பின் வரவும் பெற்றும், காரணச்சொல் தொக்கு நிற்க ஆக்கச் சொல் வரப்பெற்றும், ஆக்கச் சொல் தொக்கு நிற்கக் காரணச்சொல் வரப் பெற்றும், இவ்விருவகைச் சொல்லும் தொக்கு நிற்கவும் நடக்கும்' என்க. செயற்கை விகாரம் உள்ளது.

இதனைப் பவணந்தி முனிவர் அவர்கள் தாம் செய்த நன்னூல் சொல்லதிகாரத்துள்,—

"காரண முதலா ஆக்கம் பெற்றும்
காரண மின்றி ஆக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்
இருமையு மின்றியும் இயலும் செயும்பொருள்."

என்று விளங்கக் கூறுவர்.

இப் பெயர் இரண்டனுள் சிறப்புவகையில் முற்பட்ட தந்து வாயர் என்னும் பெயர் வேதாகம புராணேதிகாசமாகிய எந்நாலும் பயிலும் வாயராகிய அந்தணர் என்று பொருள்பட,—

"மறைநூல தாகிய வைதிக நூலினு மாசில்பல
முறைநூல தாகுமி லௌகிக நூலினு முத்திநெறி
அறைநூல தாகிய வேதாந்த நூலினு மாயறத்தின்
[illegible]"



மண்டலக் கிழார் திருவாளர் - திரு. கார்த்திகேய முதலியார் அவர்கள் தாம் பாடிய செங்குந்தர் மரபு விளக்கம் என்னும் நூலினுள்,—

"தாயரும் பன்னநன் மாணக்கர் யாருந் தழைந்துவர
நேயரி னெண்ணி முகமே யகமே நெடிதலர்ந்தே
ஆயரு நூல்பல வாய்கொண் டுரைத்தலி னன்றதந்து
வாயரென் றோர்பெயர் பூண்டனர் செங்குந்தர் மண்டலத்தே."

என்று விளக்கமாகக் கூறுவாராயினர்.

இனி, பொதுவகையில் தந்து வாயர் என்னும் பெயருள் முன்னின்ற தந்து என்னும் சொல் கல்வி நூல் என்றே பொருள்பட நிகண்டு நூலார்,—

"தந்தெனப் படுவது கல்வி நூல் பஞ்சி நூல்
சந்ததி தந்திரம் தந்த னெச்சமாம்."

மேற்கோள் சூத்திரம், குமாரம்.

என்று யாப்புச் செய்துள்ளனர்.

பழைய காஞ்சிப்புராணம் ஒன்றிலும் தந்து என்ற பதத்தைக் கல்விநூல் வல்ல கவிஞருக்கே சொந்தமாக,—

"கந்தனிற் பொலிவுறும் கவின்சி றார்களும்
பந்தினிற் பயிலுறும் பத்மினிப் பெண்களும்
தந்துவிற் பலவல தன்மை யோர்களும்
வந்துவந் திடையறா வனப்புங் கொண்டவே."

என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இனி, சூத்திரத்துள் வரும் பஞ்சி நூல் என்னும் சொல்லுக்குப் பவணந்தி முனிவர் அவர்கள் தாம்செய்த நன்னூல் பொதுப்பாயிரத்துள், 'தன்னுடைய சொற்களே பஞ்சு ஆகவும், செய்யுளே இழை ஆகவும், செவ்வை யாகிய சொற்களை அறிந்த புலவனே நூற்ற பெண்ணாகவும், குறைதல் இல்லாத வாயே கை ஆகவும்,

*காட்டுமொரு வைசியராம் காருகர்தம் மாட்சிபல*
*பாட்டி லடங்குமதோ பார்."* காருகமெட்டு

என்றும்,

*"கைக்கோளர் தாங்கண்ட காருகத்தை வாணிபமாய்*
*நற்கோல மக்களுக்கு நல்குவரால்—சிற்கோல*
*ஞான சபைத்திரையும் நாட்டுமா லவர்பணியை*
*வானத் தவர்புகழ வந்து."*

என்றும் செங்குந்தர் புகழ்மாலையில் தபோமயம் சத்தியசந்த முனிவர் அவர்கள் விளக்கமாகக் காட்டுகின்றனர்.

தந்துவாயர் காருகர் என்னும் கற்பிதப் பெயர் இரண்டும் கைக்கோளக் குலமக்களுக்கு வித்துவான் தாண்டவராய முதலியார் அவர்கள் முதன்முதல் அவ்வச்சாதியார் காலநிலைமைக் கொப்ப நூதனப் பெயர்களைச் சேர்த்து கி. பி. 1826ம் வருஷம் அச்சிட்ட திவாரகம் ஒன்றிலொழிய மற்றைய நிகண்டுகளாகிய பிங்கலம், ஆசிரியம், கயாகரம், காங்கேயம் முதலான நிகண்டுகளில் காணப்படவில்லை. அன்றியும், நிகண்டு நூற்களையெல்லாம் ஒப்புநோக்கி முதன் முதல் அகராதி வழியிற்பெயர்களைக் கண்ட வீரமாமுனிவர் அவர்கள் தம் சதுரகராதியுள் தந்துவாயர், காருகர் என்ற பதங்களுக்குக் கைக்கோளர் என்று பொருள் கூறினாரில்லை.

இவ்வகராதி யாழ்ப்பாணத்திலே அமரிக்கன் மிஷன் பாதிரிமார்களால் கி. பி. 1842-ஆம் வருஷத்தில் அச்சிடப்பட்டது

தமிழுக்கு முதன்முதல் அகராதி வீரமாமுனிவர் என்னும் தைரியநாதன் அவர்கள் தாம் செய்தனர் என்பதை என்னால் இயற்றப்பெற்ற 'காரனேஷன்' தமிழ்மொழியகராதிக்கு முகவுரை எழுதிய காலஞ்சென்ற J. M. நல்லசாமிப்பிள்ளை B.A.,B.L., (District Judge, Guntur.) அவர்கள் அதன்கண் பின் வருமாறு எழுதியிருக்கிறார் :—

It is wellknown that there are very many lexicons in Tamil, and some of them very old, but they are all in verse The credit of being the pioneer in lexicons ***on the Europeon. model*** is due to the famous Father Beschi, otherwise known as Viramamunivar who laboured long and well in Southren



India. He was appointed to the South India Missions in 1700 and died at Manaparai in 1742. He lived at Avur, near Trichinopoly, assuming the dress, and conforming to the habits of a Hindu Guru. He wrote several Grammars, and the Latin translation of the sacred Kural is also ascribed to him. And his work *சதுரகராதி* is the first lexicon of the kind in Tamil. This was the basis on which the subsequent lexicons have been worked in Southren India.

காருகர் என்னும் பெயரை,—

*"பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்."*

என்று சிலப்பதிகாரம் கூறும். இப் பெயர்க்குப் பொருள், ஆசிரியர் அடியார்க்கு நல்லார் 'பட்டு நூலானும் எலி மயிரானும் பருத்தி நூலானும் நுண்ணியதொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச்சாலியர் இருக்குமிடங்களும்' என்று சாலியரையே குறிப்பிட்டுக் கைக்கோளக் குலமக்களைக் காட்டாது விட்டது இங்கே கவனிக்கற்பாலதொன்றும்.

*"காருகக் கிளவி கைவினை மாக்கள்*
*பேரெனப் பொதுவிற் பேசினர் புலவர்."*

என்பது கலைக்கோட்டுத்தண்டு

கலைக்கோட்டுத்தண்டு, பார்த்திபம், குமாரம், கைலாயம், பிங்கலம், ஆசிரியம், கயாகரம் முதலான நிகண்டு நூல்களாலும் வேதாகம புராண விதிகாசமாதியவைகளாலும் பிரிவுகண்டு கூறப்படுவனவெல்லாம், பிரமபரம்பரை யாராகிய அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்தர் பெயர்களும், அவர்கள் செயல்களும், இவர்களுக்குள் மாறுபட்டதனால் உண்டான அநுலோமர், பிரதிலோமர், ஆதிய சங்கரவினத்தர் பெயர்களும், அவர்கள் செயல்களும் அல்லாமல் சிவ்பரம்பரையைப்பற்றி யாண்டும் யாதும் கூறப்படவில்லை.

சிவபரம்பரையார் என்பவர் ஆமர்த்தகமட ஆதிசைவ சிவாசாரியர்களும், கந்தமாதன மடாலயத்துக் கைக்கோளருமே வேறு

எவருநம் அல்லர். இவருள் சிவபூஜா துரந்தரராகிய சிவாசாரியார் அந்தணப் படிவத்தராயும், கைக்கோளர் (வீரவாகு சந்ததியார்) அரசப் படிவத்தராயும் விளங்கிவந்தவர். இதனை,—

> "ஆதி முகத்துதித்த அந்தணரே அந்தணராய்
> ஓதுஞ் சிவாகமங்கள் ஒவ்வொன்றும்—பேதமையால்
> வேறாகக் கட்டுரைத்தல் வீண்வாத மேயாகும்
> மாறாகக் கூறுவதென் மற்று."

என்று ஆதிசைவவெண்பாவும்,

> "மங்களஞ்சேர் சைவ மரபினரே யிப்புவியில்
> செங்குந்த நன்னாமம் சேர்ந்திட்டார்—துங்கநவ
> வீரர் வழிவந்த வீரரவர் கேண்மினே
> வார முடனேற்று வந்து"

என்று வமிசாவளி வெண்பாவும் சொல்லும்.

இங்ஙனமாகப் பல பிரமாணங்கொண்டு கூறிவந்த ஆராய்ச்சியின் உரையால், கைக்கோளக் குலமக்கள் இடையில் ஏற்றுள்ள தந்துவாயர் காருகர் என்னும் பெயர்கள் இரண்டும் இத்தன்மையதென்பதூஉம், அவர்கள் உலகில் வழங்கிவரும் மக்கட் ஜாதியில் சிவபரம்பரையினரென்பதூஉம் அறிவுடைய நன்மக்கட்கு விளக்கமாக விளங்காமற்போகாது. ஆயினும், இன்னும் பல நூற்கொண்டு ஆராய்ந்து முடிபுகாண வேண்டுவது ஒருதலையாம்.

குறிப்பு:— செங்குந்த குல மக்களுள் பலர், வரலாற்று முறையிற் படித்துணர்ந்த வித்துவான்களாக ஒவ்வொரு நாட்டுள்ளும் உண்டு. அவர்களெல்லோரும் தனித்தனி ஒவ்வொரு விஷயங்களை மேற்கொண்டு இலக்கண முறையில் சரித்திர ஆராய்ச்சியுடன் விளங்க வியாசங்கள் பல எழுதி அனுப்பிக்கொண்டு வந்தால், "செங்குந்த குல சரித்திரத் திரட்டு" என்னும் அரிய பெரிய ஆராய்ச்சிநூல் வெளிவர மிக்க உதவியாயிருக்கும். இத் துறையில் முற்றும் நம்மையே எதிர் பார்ப்பது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை என்பதைத் தெரிவிக்கின்றேன்.

---



# முயற்சியும் கடமையும்

முயற்சி ஊழின்முன் எம்மட்டில் வலிமை உடையது என்பதையும், மனிதர் அதனைக் கைப்பற்றினால் எவ்வளவிற் பயன் பெறுகிறார்கள் என்பதையும், கடமை என்பது யாது என்பதையும் சற்று நிதானித்து ஆராய்வோமானால், ஒரு வகையாக அதன் உண்மை விளங்கும். இதைப்பற்றி ஆன்றோர் அபிப்பிராயத்தையும் விளக்குவோம்.

> "தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்"

என்னுங் குறளின் பொருளாவது:— விதியில்லாவிடினும், முயற்சி செய்வானானால், அம் முயற்சி உடம்புவருந்திய வருத்தத்தின் அளவு கூலிதரும் என்பதே. இதனால், விதியில்லாதபோதும் முயற்சியினால் சிறிது பயன்பெறலாம் என்று ஏற்படுகிறது. அம் முயற்சிதான் மனிதனிடத்தில் எவ்வகையாலே வந்தடையும் என்பதை அறிந்தால், அது தேகத்தை ஒரு பற்றுக்கோடாகக் கொண்டிருக்கிறதென்றும், நோய் நீங்கிய தேகத்தினிடத்தேயே அதன் ஆட்சி செல்வதென்றும் தெரிகிறது. தெரியவே, நோய் உற்ற மெய்யினிடத்தே முயற்சி செல்வது எப்படி? மெய் வருந்துவது எப்படி? கூலிபெறுவது எப்படி? இதன் உண்மை உணருங்கால் முயற்சியினும் ஊழே வலி உடையது என்பது கீழ்க்கூறப்படும் செய்யுளால் அறியலாம்.

> "ஆகூழாற் றோன்றும் அசைவின்மை கைப்பொருள்
> போகூழாற் றோன்றும் மடி" திருக்குறள்

என்பதனால், ஒரு காரியத்தைத் தொடங்கி அதனை முற்றுப் பெறுவித்தற்கு நல்விதியாலே அசைவின்மையாகிய முயற்சி இயல்பாயே உண்டாகும் என்பது வற்புறுத்தப்படுகிறது. முதலுக்கே மோசம் வரும்பொழுது வட்டிக்கு அழுவது எப்படி? முயற்சியின் வலிமை இம்மட்டு என்பது இதனால் தெரிந்து கொண்டோம். ஆகவே, இவ்விரண்டு குறளும் தம்பொருளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி முரண்படுகிறதென்பதும், முற்கூறிய குறளினும் பிற்கூறிய குறளே வலிமை பெற்றதாகும் என்பதும், அவற்றின் பொருளை உற்றுநோக்குவார்க்கு இனிது விளங்கும். ஆயின்,

முயற்சியாற் பயனில்லை என்று ஏற்படுகிறதே என்றால், எவ்வளவு பேணினாலும் எவ்விதத்தாலும் நிலைபெறாது இவ்வுலகில் உயிரோடு கூடியிருக்கும் அற்ப ஆயுள்நாட்களிலும் ஒரு நிலையை உடையதாயிராது அளவிடற்கரிய நோய்களுக்கும் துன்பங்களுக்கும் கொள்கலனாய் இவ்வுடற் பொறையாகிய ஊன்சுமை எப்பொழுது கழியும் எப்பொழுது கழியும் என்று அறிஞரால் வெறுக்கத்தக்கதாயுள்ள உடம்பைப் பேணுதற்கு உரிய பொருளையும் சுகத்தையும் கொடுப்பதாகிய அம் முயற்சி விரும்பியவாறு கொடாவிடினும் உலோக அபவாதத்தின் நின்றும் நீங்குவதாகிய ஒருபேற்றை அது நமக்குத் தருகிறது.

எங்ஙனமெனின், உதாரணமாக மதியீனன், விதியீனன் என்னும் சகோதரர் இருவர் ஒரே குடும்பத்தில் மனமொத்து வாழ்ந்து கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்களுள் விதியீனன் நோயுற்றவனாயிருக்கிறான். அவன் எவ்வித சிகிச்சையினாலும் இனி பிழைக்கமாட்டான் என்று மருத்துவராலும், மற்றக் குறிகளாலும் கைவிடப்பட்ட நிலைமையில் இருந்தாலும் அவனுடன் பிறந்தவனாகிய மதியீனன் அவனுக்குச் செய்யவேண்டிய முறைகளைச் செய்யாது 'இனி ஏது இவன் பிழைக்கிறது' என்று தம் முயற்சியைக் கைவிடுவானானால், உலகம் நோயாளியினது விதியைப் பழிக்காமல், "சண்டாளன் உடன்பிறந்தவனாயிருந்தும் அவனுக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்யாது அநியாயமாகக் கொன்றுவிட்டான்" என்று மதியீனனையே பழிக்கும். குறிகளையும் நிலைமையையும் கருதாது நோயாளிக்குச் செய்ய வேண்டியவைகளை முறையாகச் செய்திருப்பானானால், "எவ்வளவு பாடுபட்டான்? சகோதரர்களென்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? பாவி பாழ்த்த விதியால் இறந்துவிட்டான்" என்று விதியையே உலகம் பழிக்கும்.

இவற்றினின்றும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது, உலகத்தில் மனிதர் செய்யவேண்டியதெல்லாம் கடமையாக முடிகிறது என்பதுதான்.

"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி"

என்பதும், திருக்குறள்



"உலகத்தில் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்று கண்ணை மூடினேன் திரும்பக் கண்விழித்தேன் செய்யுங் கிரியைகள் யாவும் கடமைகளாக அமைந்திருக்கின்றன என்பதை அறிந்தேன்" என்ற மேல் நாட்டுப்பெரியார் ஒருவர் வாசகமும் இங்கே இதனை வற்புறுத்தும்.

இதைச் செய்தால் இப்பயன் உண்டாகும் என்னும் எண்ணத்தோடு ஒரு காரியத்தை ஆரம்பித்தால், அதற்கிடையூறு இவ்வளவு என்று அளவிட்டுச் சொல்லமுடியாது. ஆரம்பித்தபொழுதே அக்காரியம் அழிந்துவிடுதலும் சிலகாலஞ்சென்று முற்றும் முடிவுபெறாது இடையில் நின்று விடுதலும் மற்றொன்றாக முடிதலும், அன்றி, அதுவே முடிதலுமாய் ஓர் வரையறையின்றி மனிதன் அறிவுக்கு எட்டாது நிற்றலின், முன்னோர் கைக்கொண்ட முறையேபற்றி நடந்தோமானால் அது நன்மையாக முடியினும், தீமையாக முடியினும் உலகம்பழிக்காது என்னும் ஒரு சமாதானங்கொண்டே எக்காரியங்களையும் செய்ய வேண்டுமென்பது இதுகாறுங் கூறியவற்றால் கண்ட அபிப்பிராயம். பயன் கருதுவானானால், காரியமுடியாத பொழுது துன்பப்படுதலாலும், கருதானானால் அது இல்லை ஆதலாலும், உலகியலை உற்று நோக்குவார்க்கு இது நன்கு விளங்குமாதலாலும், நம் பெரியோர் இக் கடமை என்னும் புணைபற்றியே உலகமாகிய கடலில் உலாவி வந்தார்கள் என்பது ஒருதலையான் உணரப்படும்.

---

# பய மெனும் பேய்

[ஸ்ரீமான் தி. சோமசுந்தர செட்டியார் அவர்கள்]

பயப்படுதலாவது அஞ்சுதலாகும். இது கோழை மனத்தின் குணம். மனத்தைப் புகுந்து ஆட்டும் தீக்குணங்கள் பலவுள. அவைகளுள் பயமும் ஒன்றாகும். ஆட்டி அலைத்து அல்லற் படுத்துவதே பேய்க்குணம். பயமும், தான் அடைந்த ஒருவனை ஆட்டி அலைத்து அல்லல் படுத்துந்தன்மையது. பயங்கொண்டோர் உயிர் ஊசலாடுகின்றது. நெஞ்சம் பதைப்புறுகின்றது. உடல் துடிக்கின்றது. மயிர்க் கூச்செறிகின்றது. குளிருங் காய்ச்சலும் வருகின்றன. ஆதலால், அன்னார் உடல்வலி முழுவதும்

இழந்து உயிரற்ற பிணம்போற் கிடக்கின்றனர். அன்னோரை உயிர்ப்பிக்கக் கொழுமோர் காய்ச்சிக் கொடுக்கின்றார்கள். பயம் இத்தகைய தீக்குணமாதலால் இக் கட்டுரையின் மகுடம் 'பயமெனும் பேய்' என இடப் பெற்றிருக்கின்றது. நாம் நல்லன செய்தற்கு ஒரு பொழுதும் அஞ்சுதல் கூடாது இதனாலேயே திருவள்ளுவ நாயனாரும்,—

"அச்ச முடையார்க்கு அரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு"

என்று கூறியிருக்கின்றார்கள். தற்காலத்து மக்கள் அஞ்சுவனவற்றிற்கு அணுவளவும் அஞ்சுகின்றார்களில்லை. அஞ்சத் தகாதனவற்றிற்கு அஞ்சுகின்றார்கள்; அலறுகின்றார்கள், ஏன்? அவர்களைப் பயம் எனும் பேய்பிடித்துப் பெரிதும் ஆட்டி அலைக்கின்றது. அதனாலேயே, பைசாசங்களுக்கெல்லாம், ஐந்தேகாற் பணமும் ஆறேகாற் பணமும் அவிழ்க்கின்றார்கள்; முடிக்கின்றார்கள்.

எடுத்ததற்கெல்லாம் பயம்! ஏதாவது ஒரு பொருளைப் பார்த்தாற் பயம் கேட்டாற் பயம்! வெள்ளைச் சட்டையையும் சிவப்புக் குல்லாயையுங் கண்டால் வெடுவெடுத்து ஆடுதல்! என்ன பயம்! "ஹாய்" என்று ஒருவன் காட்டுக் கூப்பாடாய்க் கூப்பிட்டாற் பயம்! "ஆ" வென்று அலறினாற் பயம்! ஆடினாற் பயம்! அதிர் வேட்டுப்போட்டாற் பயம்! உரத்துக் கதறினாற் பயம்! பதறி விழுந்தால் இடறிவிழுந்தாற் பயம்! இருட்டைக் கண்டாற் பயம்! "டக்டக்" என்று இரவிலே தெருவிலே ஒரு டில்லிமட்டம் போனாற் பயம்; எங்கும் பயம்! உடல் நடுநடுங்குகிறது; வியர்வைக் கக்குகிறது. கண்கள் உள்ளே போய்ப் பதுங்கி விடுகின்றன. வாய் அடைத்துப் போய்விடுகின்றது. இதற்குக் காரணம் மனப்பீதியே யாகும். மனம் மிரண்டு போகின்றது. கால் கைகள் விறைத்துப் போகின்றன. "மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது முதுமொழியன்றோ? நல்ல வீடுகளிலெல்லாம் "பைசாசம் குடி புகுந்திருக்கிறது" என்று கட்டிவிடுகிறார்கள். வீதிகளிலெல்லாம், "பைசாச ஓட்டம் இருக்கிறது" என்கிறார்கள். ஆஹா! என்ன பேதமை! பாலத்தடிகள் மரத்தடிகள் பாழுங்கிணத்தடிகள் எல்லாவற்றிலும் பேய்கள் இருக்கின்றனவாம். ஆங்குப் பேயுமில்லை ஒன்றுமில்லை. அவைகள்

ஆரம்பத்தம.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தத்திரயம்

[ காஞ்சி நாகலிங்க முனிவர் பதிப்பு ]

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினையும் சிறந்த உரைகளுடன் ஆராய்ந்து செப்பஞ் செய்து, தமிழ்த் திருநாட்டுக்கும் சைவப் பெருநாட்டுக்கும் உபகரித்த அருந்தமிழ்ப் புலவர் நமது மடாலயத்துக் காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள், **சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம்** ஆகிய மூன்று சீரிய நூல்களையும் திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞான யோகிகள், சுப்பிரமணிய தேசிகர் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் ஆகிய இவர்கள் முறையே கண்டருளிய உரைகளுடனும், நமது மடத்தினர் அவ்வப்போது எழுதிவைத்த குறிப்புரைகளுடனும், அரும்பத வகராதி அருந்தொடர் விளக்கம் மேற்கோள் விளக்கம் முதலியவற்றுடனும் உயரியதாளில் புதிய எழுத்தில் அச்சிட்டுக் குறைந்த விலையில் வெளியிடக் கருதி, அச்சுவேலை தொடங்கி நடத்திவருகின்றனர்; அது விரைவில் வெளிவரும். முற்பொருள் செலுத்தித் தமது பெயரைப் பதிவு செய்து கொள்பவர்கட்கு அதன் விலை ரூபா நான்காகும்; அங்ஙனமின்றிப் புத்தகம் முடிந்த பிறகு வாங்குவோருக்கு ரூபா ஐந்தாகும். வேண்டுவோர் அடியில் வரும் விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்.

விலாசம்:—

கு. கதிர்வேல் முதலியார்,
22-4-27 சொந்தக்காரர்:—நோபில் பிரஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

நோபில் பிரஸ், சென்னை.

உள்ளது உள்ளவாறு தான் இருக்கின்றன; அவ்வாறு உரைப்போர் உளங்களிற்றான், ''பயம்! பயம்!!'' என்ற பேய் குடிகொண்டிருக்கின்றது.

இனிச் சிறு பிள்ளைகளையும் பயமுறுத்தல்தான் வேடிக்கையிலும் வேடிக்கை! சில பெற்றோர்கள் பிள்ளைகளை, ''வெளியே போகாதே! பிள்ளையைப் பிடிப்பவன் வந்து பொடியைப் போட்டு மயக்கிப் பிடித்துக்கொண்டு போய்விடுவான்'' என்கிறார்கள். சிலர் நிழலைக் காட்டி ''இதோ பார்! பூச்சாண்டி!!'' என்கிறார்கள். ''மண்டைப் பூனை வந்துவிடும், குடித்துவிடும் கஞ்சியை'' என்கின்றார் சிலர். இவ்வாறே பயமுறுத்திக் கொண்டே பிள்ளையின் வாயில் கஞ்சியை வைத்துக் குத்துகின்றார்கள். பிள்ளைகள் வெடுவெடுத்து நடுங்கிக்கொண்டு பாதிக்கஞ்சியை உட்கொள்ளுகின்றன; பாதியை வெளியே கக்கிவிடுகின்றன. உள்ளே சென்றதும் வயிற்றுக்குட் போய்ச் சேராமல் வழியிலே தடைப்பட்டு நிற்கின்றது. ஏனெனில் பயம் நிறைந்திருக்கின்றது. அதனாற் பிள்ளைகள் மறுக்கடிக்கப்படுகின்றன. பிறகு கஞ்சியை வாயில் வைத்துக் கெட்டித்தாலும் உள்ளே இறங்காது! ஏன்? பயங்கலந்த கஞ்சிபோய் எல்லா உறுப்புக்களிலும் கலந்திருக்கிறது. பின்பு பிள்ளையை அடிக்கிறார்கள்; உதைக்கிறார்கள். பிள்ளை அழுதுகொண்டு கீழே மயக்கமாய்ப் படுத்துக் கொள்ளுகின்றது. சாப்பிட மாட்டேன் என்று பிடிவாதஞ் செய்கின்றது. பிறகு பசியின்மையால் எல்லா உறுப்புக்களும் மெலிந்து போகின்றன. கண்கள் அமிழ்ந்து போகின்றன. நெற்றிச் சுருங்குகிறது. வயிறு உள்ளே போய் விடுகிறது. பிள்ளை படுத்த படுக்கையிலேயே கிடக்கிறது. இந்த நிலையில் தந்தையாரும் தாயாரும் பக்கத்திலே இருந்துகொண்டு வருந்துகின்றார்கள், ''பிள்ளை பயந்துவிட்டது அவளுக்கு அஞ்சேகாற் பணம் முடிந்து வையுங்கள். பிள்ளை சும்மாவிருக்கும்'' என்கிறார்கள். பிறகு டாக்டர் வந்து ஏதேனும் ஒரு தண்ணீரைக் கொடுத்துவிட்டு, ஆகாரங் கொடுக்கும்படி சொல்லுகிறார். ஆகாரத்தை உட்கொண்டவுடன் பிள்ளை மயக்கந் தெளிந்து எழுகிறது. ஆ! இதற்குள் என்ன திருவிளையாடல்கள். பின்பு அப் பிள்ளைகள் தங்களுடைய வயது காலத்தில், கோழை மக்களாய் உயிரற்ற வாழ்க்கை வாழுகின்றனர்; இதற்குக் காரணம் பெற்றோரேயாவர்.

நமது பெண்மக்களிடத்தில் தைரியமென்பது மருந்துக்குக் கூடக் கிடையாது "த்தா" என்று அதட்டினால் பயந்து விடுவார்கள். "நீ அன்றைக்கு என்ன செய்தாய்" என்று ஒருவர் சாமியாடினாற் போதும். எதைக் கேட்டாலும் கொடுத்து விடுவார்கள். கும்பிடுவார்கள் "இது ஆகாது, நில்" என்று ஒரு வழிப்போக்கன் சொன்னாற் போதும். "அப்பா ஒன்றுஞ் செய்யாதே, நான் எல்லாவற்றையுங் கழற்றித் தந்துவிடுகிறேன்" என்பார்கள். காரணம் என்ன பயம்! பயம்!!

இனி ஏழு பிள்ளைக்காரி, நமது நாட்டில் என்ன வேலை செய்தாள்! சைவர் வீடுகளிலெல்லாம் நாமம் போடச் சொன்னாளன்றோ? அப்பொழுது ஊரெல்லாம் கலங்கிப் போய்விட்டன வல்லவா? அந்தோ! இன்னும் இந்த மூடத்தனம் தொலையவில்லையே. மனிதருக்கு வேண்டிய நலுங்குணங்களில் மிக முக்கியமானது பயமின்மையே யாகும். நாம் பயந்து கொண்டிருக்கும் வரையில் அடிமை வாழ்க்கையே வாழ முடியும். சுதந்தர வாழ்க்கைகிட்டாது. ஏனென்றால் பயம் நம்மைக் கீழே அமிழ்த்தி விடும்! பயமின்றி நாம் நிமிர்ந்து நிற்போமானால், நம்மை ஒருவரும் ஒன்றுஞ் செய்ய முடியாது.

நமது பண்டைத் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கை இதுதான். அவர்கள் அஞ்சா நெஞ்சராய் ஆண்தகைமை யுடையராய் நிமிர்ந்து நின்றனர். நம்மைப்போல் யாண்டுந் தலைகுனிந்து கைகட்டி, வாய்பொத்திக்கொண்டு நிற்கவில்லை.

ஆஹா, நமது நாடு எவ்வளவு வீரர்கள் பிறந்த திருநாடு! அப்பர் சுவாமிகள் என்ன? பிரகலாத ஆழ்வான் என்ன? நக்கீரன் என்ன? என்ன அஞ்சாமை! என்ன அஞ்சாமை!! என்ன கடலிலே கல்லிற் பிணைத்துப் போட்டாலும் பயமில்லை! நஞ்சை ஈந்தாலும் பயமில்லை! யானையை இடறவிட்டாலும் பயமில்லை! நீற்றறையிற் போட்டாலும் அச்சம் என்பதில்லை! உச்சிமலையிலிருந்து கீழே உருட்டி விட்டாலும் அச்சமில்லை! அச்சமில்லை!! ஆ! ஆ!! அவர்களுடைய அஞ்சாமையை என்னென்பேம்!

இவ்வாழ்க்கையைத்தான், இப்பொழுது நமது நாடு விரும்பி நிற்கின்றது! ஆதலால், எல்லோரும் அஞ்சாமையைக் கைக்கொள்



208433

ளுதல் வேண்டும்! உள்ளம் உரை செயல் எல்லாவற்றினும் அஞ்சாமையைக் காட்டுதல்வேண்டும்! பேசும்பொழுது "ஞஞ்ஞே முஞ்ஞே" என்று முசும்புதல் கூடாது. நடக்கும் பொழுது கம்பீரமாக நடத்தல் வேண்டும்! முன் வைத்தகாலைப் பின்வைத்தல் கூடாது. வெற்றி முழக்கஞ் செய்தல் வேண்டும். ஆதலால் அன்பர்களே! பயமெனும் பேயை ஓட்டுமின்! ஜெயமெனுங் கொடியை நாட்டுமின்! பெற்றோர்களே பிள்ளைகளுக்கு உணவொடு பயத்தையுங் கலந்து ஊட்டாதீர்கள்.

---

# நெசவுத்தொழிலும் சுய ஆட்சியும்

[ஸ்ரீமான் சை. தி. நடேச முதலியார் அவர்கள்]

நம் இந்திய மக்களிற் பெரும்பாலோர் ஜீவனாதாரமாகக் கொண்டுள்ள தொழில்கள் பலவற்றினுள் உழவு, நெசவு ஆகிய இரண்டும் மிகச்சிறந்தவைகளாம். இவைகள்தாம் மானிட வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதவைகள். எக்காலத்தினும் எவராலும் நன்கு மதிக்கப்பட்டவைகள். இவ்விரண்டினுள்ளும் நாம் இப்போது மேல்நாட்டவரோடு போட்டி போடுவது நெசவுத்தொழிலின் வன்மையால்தான். சுய ஆட்சி விருப்பமுடையவர்களும் நெசவுத்தொழிலைத் தான் அங்கங்கே முயன்று பரப்பிக்கொண்டு வருகின்றார்கள்.

அடுத்தபடியாக இதற்கு மிகவும் ஆதரவாயுள்ளது கொட்டை நூற்றல். கொட்டை நூற்றலாவது பருத்தியைக்கொண்டு நூல் ஆக்குவித்தலாம். பண்டைய நாட்களில், அதிக மெல்லிய நூல்களை யெல்லாம் கை ராட்டினங்களினாலேயே நூற்று வந்தார்கள் என்று அறியப்படுகின்றது. இப்போது வழங்கிலுள்ள 60, 70, 80, 90, 100, 110, 120 முதலிய நெம்பர்களையுடைய மெல்லிய நூல் தினுசுகளுக்கும் மேலான அதிக மெல்லிய நூல் வகைகளையும் நூற்றுவந்தார்களென்று அக்காலத்தில் நெய்யப்பட்ட பூந்துகில்களினாலேயே நன்கு அறியப்படுகின்றது.

அக்காலத்தில், இத்தொழிலை (நூல் நூற்கும் தொழிலை) யாவரும் நன்கு மதித்து நால்வகை வருணத்துக் குலமகளிர்களும்,

தங்களுடைய வீட்டுவேலையைச்செய்த நேரங்கள் போக, தங்களுக்குண்டான ஓய்வு நேரங்களில் நூல் நூற்று நல்ல ஊதியங்கள் பெற்றுவந்தார்கள் என்றும் அறியப்படுகின்றது. இதை அநேகமாய்ப் பெண்களுக்குரிய தொழில் என்றே சொல்லலாம். வயது முதிர்ந்த கிழவிகளும் செய்யலாம்; ஆனால் கிழவிகள் நூற்கும் நூலானது மங்கைப் பருவத்தினர்கள் நூற்கும் நூலுக்கு ஒப்பாகாது. இது நமது மகளிர்களுக்கு நல்ல ஊதியத்தைத் தருவதன்றி, அவர்களுக்கு உண்டாகும் சோம்பலைப் போக்கி அதிக உற்சாகத்தையும் தரும் என்பது உண்மையாகும்.

அயல் நாட்டினர்கள் நம்முடைய தேசத்திலே பயிராகும் பற்பல பருத்தித் திரைகளையெல்லாம் சொற்ப விலைக்குவாங்கி, தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோய்த் தங்களது புத்தி கூர்மையால் நூலாக நூற்றும், ஆடைகளாக்கியும் அவைகளை மறுபடியும் நம்முடைய நாட்டிற்கே அனுப்பிவைத்து, நல்ல லாபத்தை அடைந்து வருவது யாவரும் வெளிப்படையாய் அறிந்துள்ள விஷயம். இத்தன்மைத்தாய இத்தொழிலை இக்காலத்து நவீன நாகரீகமுடையோர் அநேகர் சென்ற பல வருடங்களாக அவமதித்துக் கைவிட்டதன் காரணமாகத்தான் நமது இந்திய தேசம் இக்கதியில் வந்துவிட்டது. சுய ஆட்சி விருப்பமுடையவர்களாகிலும் இத்தொழிலை அங்கங்கே நிலைநாட்டுவார்களென நம்புகின்றோம்.

ஆனால், இப்போது இதனைச் செங்குந்த முதலிகள் வகுப்பினர்களது குலமகளிர் யாரும் செய்வார்களென்று எதிர்ப்பார்க்க முடியாது. ஏனென்றால், அவர்கள் தமது ஆடவர்கள் செய்யும் நெய்தற்றொழிலுக்குரிய பாவுமுதலியன செய்து கொடுப்பதற்கே போதிய நேரமின்றிக் கஷ்டப்படுவது எல்லோரும் அறிந்ததே. இதனைத்தான் முன்பு நடந்துவந்த செங்குந்தனில் "செங்குந்தர்களும் கைராட்டினங்களும்" என்னும் மகுடம்புனைந்த வியாசத்தில், 'செங்குந்தர்களது குலமகளிர்கள் கைராட்டினங்கொண்டு நூல் நூற்கும் வழக்கங்களைக் கைப்பற்றக் கூடாது' என்றும், 'அவ்வாறு நூல் நூற்றால் இது நம்பத்தக்க ஊதியம் தராது' என்றும் குறித்துள்ளார்கள். ஆகையால் இத்தொழிலை அவர்கள் அல்லாதாருடைய குலமகளிர்களே செய்யவேண்டும் என்பதாயிற்று. அக்காலத்திலும் அவ்வாறே தான் நடைபெற்றிருக்க வேண்டுமென்றும் பெரும்பாலும் யூகிக்கப்படுகின்றது.



இப்போது கை ராட்டினங்களினால் நூல் நூற்க முயற்சி செய்பவர்கள் நெசவாளர்களுக்குத் தேவையான நூல்களை நன்றாகவும் நாணயமாகவும் செய்து கொடுப்பார்களென்று எண்ணுவதற்கு இடமில்லை. இதனால், பண்டைய நாட்களிலிருந்த ராட்டினங்களுக்கும் இப்போது உள்ளவைகளுக்கும் சிலபேதங்கள் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்க இடந்தருகின்றது. ஆனால் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்றபடி நமது முயற்சி திருவினையைப் பயக்காமற் போகாது. எனவே, இப்போது உள்ள கை ராட்டினங்களினால் நாணயமான நூல் வகைகளை நூற்க முடியவில்லையே என்று இதனையும் கைவிடவேண்டாம் என்பதே எமது முக்கிய கொள்கையாகும்.

அடிநாள் முதற்கொண்டு இதுவரையிலும் நமது நாட்டில் நெசவுத் தொழிலை மேற்கொண்டுள்ள செங்குந்தரும், பின் இத்தொழிலைக் கைப்பற்றிய தேவாங்கர், சாலியர், சேடர், சேணியர், சௌராஷ்டிரர் முதலிய ஜாதியார்களும் தாங்களே பருத்தியைக்கொண்டு நூலாக்கும் வழக்கத்தைக் கைக் கொண்டு இராவிட்டாலும் நெசவுத்தொழில் ஒன்றையாவது கைக் கொண்டிருப்பதனால்தான் நாம் இப்போது சுதேசிகளென்றும், அயல் நாட்டுத் துணிமணிகளைப் பகிஷ்கரிப்போமென்றும் மேல் நாட்டவரோடு போட்டிப் போடுகின்றோம். நூல் நூற்று வந்தவர்களும் அதைக் கைவிடாதிருந்திருப்பார்களானால் நமது நாடு இன்னும் மேலான நிலைமையில் தான் இருக்கும்.

இனி, நம்முடைய தாய் நாடாகிய இவ்விந்திய தேசம் முன்னேற்றமடையவேண்டும் என்கிற உண்மையான எண்ணம் நமக்கு இருக்குமானால் நம் நாட்டிலேயே பயிராகும் பருத்தியைக் கொண்டு நூலாக நூற்றும், பற்பல ஆடைகளாக்கியும் வரவேண்டுமென்பதும், நூல் நூற்கும் தொழில் நெசவாளர்கள் அல்லாதாருடைய குலமகளிரே செய்யவேண்டும் என்பதும் கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும்.

# கைத்தொழிலே சுகஜீவனம்

[ஸ்ரீமான் தி. மு. இராஜு முதலியார் அவர்கள்]

*பட்டுக்கு நூல்கொண் டிழைத்தோடித் தோய்ந்தபற் பாவைநெய்தே*
*மட்டிட்டு மாறும் வியாபாரத் தான்முன் மலர்யனைக்*
*குட்டித் தளையிட்ட கோலா கலக்குக னென்குமரச்*
*செட்டிக் கிளையநற் செட்டிக ளாகுமிச் செங்குந்தரே.*

இச் செய்யுள் சேங்குந்தர் கலித்துறைமாலை என்னும் பிரபந்தத்திற் காணக் கிடக்கின்றது.

இதன்பொருள். பட்டுக்கு நூல் இழைத்துப் பாவாக ஓடித் தோய்ந்து ஆடைகளாக்கி வியாபாரம் செய்யும் செங்குந்த குலமக்கள், முன்னம் பிரணவத்தின் பொருள் தெரியாது மயங்கிய பிரமனது தலையில் குட்டி அவனைச் சிறையிலிடுவித்த முருகக்கடவுள் ஆகிய குமரச் செட்டிக்கு இளைய செட்டிகளாவர் என்பதாம்.

கொள்முதல் வைத்துப் பண்டங்களை வாங்கி வாணிபஞ்செய்யும் செட்டிகளைப்போலாது தாமே பஞ்சை நூலாக்கிப் பாவாகத் தோய்ந்து அதனைக் கலைகளாக நீட்டி வாணிபஞ் செய்பவராதல் பற்றி நல்ல செட்டிகள் எனப்பட்டது.

கைக் கோளர்கள் உழுதல் முதலிய பலவற்றிற் கேதுவான தொழில்களினும் நெய்தற்றொழிற்கு நிகரில்லை யென அதனையே கைத்தொழிலாகக் கொண்டு ஜீவனஞ் செய்பவர்கள். அவர்களில் பெரும்பாலார் சுகஜீவிகளாயும், என்றும் நடுநிலைமையிலேயே உள்ளவர்களாயும், சுமார் 100 க்கு 10 பேர் பெரும் வியாபாரிகளாயும், சில பேர் குபேர சம்பத்துடையவர்களாயும், வெகு சிலரே ஏழைகளாயும் இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஒருவருடைய உதவியும் வேண்டுவதேயில்லை. இதற்கு நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். இக் காரணத்தினாலேயே மற்றச்சாதியார்கள் இவர்கள்மீது பொறாமை கொண்டு தூற்றுகிறார்கள். இவர்களை நெசவாளர்களென்றும், குடிக்காரர்களென்றும், ஒழுங்கீனர்களென்றும், அசுத்தர்களென்றும் மிகக் கேவலமாய்ப் பிரசங்கங்களிலும், சம்பாஷணைகளிலும், ரயில் பிரயாணஞ் செய்யும்போதும் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதைப் போன்ற பழக்க வழக்கங்களை யுடையவர்கள் தம்மைத்



தாமே உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மேல் வருணங்களில் மாத்திரமே அல்லாமல் தோட்டி முதல் தொண்டைமான் ஈறாக உள்ள எல்லாச் சாதியார்களிடத்திலும் இல்லாமற் போகவில்லை. ஆனால், அவர்கள் அதை வெளிக்குக் காட்டிக் கொள்வதில்லை. நம்மவர்களோ பட்டப்பகலில் வெட்ட வெளிச்சத்திலேயே காட்டிவிடுகிறார்கள். இவ்வாறு ஒழுக்க முடையவர்கள் வெகு சிலரே என்றாலும் மற்றவர்களைப்போல ஒளித்துவைக்கும் சக்தி இவர்களிடத்தில் இல்லாததினால்தான் மற்றவர்கள் அவ்வாறு சொல்ல நேரிடுகின்றது. இப்போதாகிலும் அந்தச் சூதை மற்றவர்களிடத்திலிருந்து கற்றுக்கொள்ளக் கூடாதா? இதனால் நம்மவர்களுக்கு இன்னும் சரியான நாகரீகம் உண்டாகவில்லை என்று ஏற்படுகின்றது. நாம் நெசவுத் தொழிலைச் செய்து ஜீவித்தபோதிலும் எந்தெந்தக் காலங்களில் எவ்விதமாய் நடந்து கொள்ள வேண்டுமோ, எவ்வித ஒழுக்கங்களைக் கைக்கொள்ள வேண்டுமோ அவ்வித் வழக்க ஒழுக்கங்களை இன்னும் கைக் கொள்ளாததினால் தான் பிறர் நகைப்புக்கு இடந்தருகின்றது. அதாவது குளிக்கும்போதும், உண்ணும்போதும், உடுத்தும்போதும், தொழிற் செய்யும்போதும், கோயிலுக்குச் சென்று சுவாமியை வணங்கும்போதும், வாணிபஞ் செய்யும்போதும், கடைக்குச்சென்று சரக்குகள் வாங்கும்போதும், ரயில் ஏறிப் பிரயாணஞ் செய்யும்போதும், மற்ற எந்த வேலைகளைச் செய்யும்போதும் ஒழுங்காய்ச் செய்தால் பிறர் நம்மீது குற்றஞ் சுமத்தக் காரணம் இராது. தாழ்த்தப்பட்டவர்களும் சீர் திருத்தப் பெற்று நல்ல நிலைமையில் இருக்கும் இந்தக் காலத்திலும் நாம் இன்னும் உறங்கிக் கொண்டிருப்பின் சின்னாட்களில் அவர்களினும் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுவோம். 'தொழில் வளர்ச்சியில் மேம்பட்ட நாடுகள்தான் நாகரீகமடைந்த நாடுகள்' என்றும், 'தொழிற் செய்து ஜீவிப்பவர்களே மனித வருக்கத்தினராவர் மற்றவர்கள் ஆகார்' என்றும் ஒரு சகோதரப் பத்திரிகை கூறுகின்றது. ஆம்! இது மெய்யாகும். ஏனெனில், வெகு சமீப காலத்தில் சீர்திருத்தம் அடையப் பெற்ற ஜப்பான் தேசமும், மேனாடுகள் என்று சொல்லப்படுகின்ற இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்களும் கைத்தொழில் வளர்ச்சியினால் அல்லவோ செல்வப் பெருக்குண்டாய் உன்னத நிலைமைகளில் இருக்கின்றன. அவைகளைப்போல இவ்விந்திய தேசம் காணப்படாமற்

போனபோதிலும், ஒரு சிறந்த நெசவுத்தொழிலைக் கைக்கொண்டுள்ள நம்மவர்கள் மற்றவர்களைப் போல ஏன் நாகரீகமாய் ஒவ்வொரு வேலைகளையும் செய்யக்கூடாது என்று நாம் கேட்கின்றோம். தகாத காரியங்களில் ஏன் தலையிடல் வேண்டும் என்று மற்றும் ஒரு முறை கேட்கின்றோம். "சிற்றுயிர்க்குற்ற துணையாம்" கல்வியை நம் மக்களுக்குப் புகட்டுவதிலும், நாணயமாய் மற்றவர்களோடு போட்டிபோட்டு வாழ்வதிலுமே கண்ணுங் கருத்துமாக இருக்கவே வேண்டுகின்றோம். இது நிற்க.

நம்முடைய நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் அவ்வீட்டுக் குடையவர்கள் கச்சேரி வேலைபார்த்து ஜீவிப்பதே மிக சிலாக்கிய மாகக் கருதுகின்றனர். அவ்வீட்டிலுள்ள மற்றவர்களோ என்றால் யாதொரு வேலைகளையுஞ் செய்யாமல் வேளைக்கு வேளை உண்ணுவதும் உறங்குவது மாகவே தங்கள் வாணளை வீணளாகக் கழிக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள்தாம் சுயநலங் கருதித் தாமே உயர்ந்தவர்கள் என்றும், தொழிற்செய்து ஜீவிப்பவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றும் கூறிக்கொண்டு திரிபவர்கள். ஒரு நாட்டில் பிறந்த எல்லோரையும் சமமாகப் பாவிப்பவர்கள் அல்லர். இந்தத் தமிழ் நாட்டில் மட்டுந்தான் இவ்விதம் நிகழுகின்றது. பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் எல்லோரும் சமமாகவே பாவிக்கப்படுகின்றார்கள். இதனால் ஒருவருக்கொருவர் பரஸ்பர சிநேகம் உண்டாய் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றார்கள். இவர்கள் தாம் சுயராஜ்ஜியம் பெறுவதற்கு அருகராவார்கள். வடநாட்டு வாசியாகிய மகாத்மா காந்தியடிகளும் இவ்வித நோக்கத்தினரே. இவர் இந்தத் தமிழ் நாட்டினரையும் பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் உள்ளவர்களைப்போல எண்ணுகின்றார். ஆனல், இங்குள்ள சூதை அவர் அறியார். சென்னை வாசிகளுக்குச் சுயராஜ்ஜியம் கிடைப்பின் அது பாழாகவே முடியும். எந்தக் காலத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்கிற பேச்சுகள் போய் சரிசமமாகப் பாவிக்கின்றார்களோ அந்தக் காலத்தில்தான் சென்னை மாகாணவாசிகள் சுயராஜ்ஜியம் பெறுவதற்கு அருகராவார்கள் என்று நாம் நினைக்கிறோம். ஜீவகாருண்ணியமே ஒரு சிறந்த மதமாகக் கொண்டிருக்கும் இந்தநாட்டினர் இவ்வித கெட்ட வழக்கங்களைக் கைக்கொண்டிருப்பது ஒருபோதும் சரியாகாது. முற்காலப் பெரியோர்கள் எக்குலத்தினர் சற்று வியர்வைச் சிந்தக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து



ஜீவிக்கின்றனர்களோ அவர்களைத்தான் மிகவும் விரும்பி வந்தனர். அவர்களிடத்தில் தான் புனல், அன்னம் முதலியன அருந்துவர். அவர்களிடுவது புற்கை அமுதாயினும் அதையே சிவப் பிரசாதமாகக் கொள்வர். இதற்குக் கிளியானூர் ஞானம்மையார் இட்ட கூழினை யுண்டு மகிழ் வெய்திய திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளும், சிதம்பரம் செங்குந்தர் வீதியில் பாவு தோய்வதற்குக் கொண்டுவந்து வைத்திருந்த பசையினை யுண்டு மகிழ் வெய்திய உமாபதி சிவாச்சாரியாருமே போதிய சாக்ஷிகளாவர். இதனல், ஒரு நாட்டில் யாவர் ஒருவர் ஒரு தொழிலைச் செய்து ஜீவிக்கின்றார்களோ அவர்களே மேலானவர்களென்றும், மற்றவர்களே தாழ்ந்தவர்களென்றும், தொழிலாளர்களை மற்றவர்கள் அவமதிப்பது கூடாதென்றும் ஸ்பஷ்டமாய்ப் பெறப்படுகின்றது. நெசவுத் தொழில் செய்து ஜீவிப்பவர்களை மாத்திர மன்று, இன்னும் தச்சு வேலை, தட்டார வேலை, கொல்லத்து வேலை, பயிர் வேலை, தையல் வேலை முதலிய தொழிற் செய்து சுகஜீவிகளாக வாழ்கின்றனர்களோ அவர்களை எல்லாம் உயர்ந்தவர்களென்றே கூறவேண்டும். ஆனல், இந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் ஒழுக்கங்கள் குறைவுபடாதிருக்க வேண்டும்.

குறிப்பு:—கட்டுரை யெழுதுவோர் கவனித்தெழுதினல் நமக்குச் சிரமமில்லாதிருக்கும்; விஷயங்களை மட்டும் கவனிப்பது தமிழுக் கழகாகா:—ஆசிரியர்.

---

# முன்னேற்ற வழி

[ஸ்ரீமான் A. S. முத்தையா முதலியார் அவர்கள் B.A.]

செங்குந்த குலச் சகோதரர்களே! சிறியேனகிய யான் இதில் கூறுவதைச் சற்று கவனித்து வாசிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். உலகத்தில் கல்வியில் முன்னேற்றமடைந்த ஜாதியை முன்னேற்ற மடைந்த ஜாதியென்று சொல்வதே தவிர பொருட் செல்வத்தில் முன்னேற்ற மடைந்த ஜாதியை அவ்விதம் கூறுவது பொருந்தாது. நம் ஜாதி கல்வியில் நிரம்பவும் பின்னடைந்திருக்கிற ஒரு ஜாதி. இவ் வகுப்பு முன்னேற்ற மடைய வேண்டுமானல் கல்வியை நம் சிறுவர்களுக்குப் புகட்டவேண்டும். அவர்கள் மூலமாக ஜாதி முன்னேறுதல் வேண்டும்.

மேலும் கல்வியில் பின்னடைந்திருக்கிற ஜாதிக்குக் கல்வியைப் பற்றி அறிவுறுத்த வேண்டுமாயின் அதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று பத்திரிகையின் மூலமாகவும் மற்றொன்று பிரசங்கங்களின் மூலமாகவுமே. இப்போது நம் ஜாதிக்காகப் பிரத்தியேகப் பத்திரிகை ஒன்று வெளிவந்துவிட்டது. செங்குந்தராகப் பிறந்த ஒவ்வொருவரும் இப் பத்திரிகையை ஆதரிக்கவேண்டியது அவ்வவருடைய கடமை. இப் பத்திரிகையை ஒவ்வொருவரும் ஆதரித்து மாதப்பத்திரிகையாக யிருக்கின்ற இதை வாரப் பத்திரிகையாகச் செய்ய முயற்சிக்கவேண்டும். அதற்குச் சந்தாதாரர்கள் கூடுதலாகச் சேரவேண்டும். இதற்கு வருடசந்தா ரூபா 1. அணா 8. இது சாதாரண ஏழைமக்களுக்கும் அவ்வளவு கூடுதல் இல்லை. ஒரு நாளைக்கு இப் பத்திரிகைக்குச் சந்தா 1 பை யேனும் ஆகவில்லை. இது எவ்வளவு ஏழையாயினும் அவருக்கு அவ்வளவு கூடுதல் தொகை ஆகா. ஆகையால், இப்பத்திரிகையை வாசிக்கும் கனவான்களே! உங்களாலியன்றவளவு இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்க்க முயற்சிக்கவேண்டும்.

பத்திரிகை ஒன்றே ஜனங்களைத் தட்டி எழுப்பப் போதாது. எழுத வாசிக்கத்தெரியாத பேர்களும் உண்டு. அவர்களுக்குப் பிரசங்கங்களின் மூலமாகவே அறிவை யூட்டவேண்டும். ஆகையால், நம்மில் கற்றவர்கள் இதற்கு முயற்சிக்கவேண்டும்,—

"முயற்சி மெய்வருத்தக்கூலி தரும்" திருக்குறள்

என்ற ஆன்றோர் வாக்குப் பொய்க்காது.

நமக்கு ஏன் கல்விவேண்டும்? நாயனார்,—

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று தெளிவாகவும் யாவரும் இலகுவில் அறிந்துகொள்ளும்படியாகவும் சொல்லுகின்றார். இப்போது உயர்தரக்கல்வி படிப்பதற்குப் பொருட்செல்வம் வேண்டும். செல்வவான் வீட்டுப் பிள்ளைகளே இதைப் படிப்பதற்குச் சக்தியுடையவர்களாவர். அவர்கள் "நம்மிடத்தில் பணமிருக்கின்றது. நாம் ஏன் படிக்கவேண்டும்" என்று சும்மா இருந்து விடுகின்றார்கள். ஏழைமக்களுக்குப் படிக்க விருப்பமிருக்கும். ஆனால், பணம் போதாமலிருக்கும் ஆகவே, விருப்பமுள்ளவர்கள் படிக்கப் பணங்கிடையாது; பணமுள்ளவர்கள் படிக்க விருப்பங்கிடையாது. அவ்விதமே நம் செங்குந்த



மரபினர்களில் சிலர் இக் காரணங்களினாலேயே படிப்பை முற்றும் விட்டு விடுகின்றனர்.

இவ்வேழை மக்கள் படிப்பதற்காக நம்மவர்கள் இருக்கின்ற ஒவ்வொரு ஊரிலும் "சேங்குந்தர் அபிவிருத்தி நிதி" என்று ஒரு நிதி ஏற்படுத்தி அவர்களுக்குச் சம்பளமும் கூடுமானால் சாப்பாடும் கொடுத்து கற்பிக்கவேண்டும். இவ்விதம் செய்தால்தான் நம்மரபு கல்வியில் முன்னேற்ற மடையுமே யொழிய வேறு வழியால் ஒன்றும் முடியாது.

இந்த ஒரேவழியால்தான் நாகர் கோவிலைச் சேர்ந்த வடசேரியில் இருக்கும் "சாலியர்" என்ற மரபினர்கள் முன்னேற்ற மடைந் திருக்கின்றார்கள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நம் மரபு இருக்கிற விதமே அம்மரபினர்களும் இருந்தார்கள். அவர்களில் சில நற்குணமுடையவர்கள் சேர்ந்து "சாலிகோத்திராபிவிருத்தி நிதி" என்று ஒருநிதி ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். அந்த முயற்சியினால் இப்போது அவர்களில் சிலர் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கின்றார்கள். சிலர் பி.ஏ. வகுப்பிலும் 'இன்றர் மீடியட்' வகுப்பிலும் வாசிக்கின்றார்கள். இன்னும் சில வருடங்களில் அவர்களில் அநேகர் பி. ஏ. பட்ட தாரிகளாய் இருப்பார்கள் என்பது திண்ணம். இவர்களை நாம் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். நம்மரபினர்களில் சிலர் மிகுந்த தனவான்களாக இருக்கின்றார்கள். இவர்கள் சற்று கருணையோடு கண்விழித்துப் பார்ப்பார்களாயின் நம் மரபு இன்னும் சில வருடங்களில் சரியான முன்னேற்றத்தை அடையும்.

கழிந்த சட்டசபை தேர்தெடுப்பில் அநேக ஜாதிகளுக்கு அங்கத்தினர் ஸ்தானம் கிடைத் திருக்கின்றது. நமக்கு ஏன் கிடைக்கவில்லை? நாம் தூங்கினோம். இன்னும் தூங்குவோமாயின் அடுத்த தேர்தெடுப்பிலும் நாம் ஏமாந்து போவோம். ஆகையால், சகோதரர்களே! விழியுங்கள். தூங்காதீர்கள்! உங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பியுங்கள்.

---

# குடியால் விளையுங் கெடுதி

[Dr. டாடா அவர்கள்]

"சாராய சம்பந்தமான பானங்கள் எல்லாவற்றையும் முழுதுமே விலக்கி விடவேண்டும். சாராயத்தின் பெருகிய உபயோகம்

இரப்பையை உஷ்ணமாக்குகிறது. சாராயத்தை வழக்கமாய் உபயோகிக்கின், அது இரப்பையின் ஜீரணசக்திக்குரிய மேற்றளத்தைக் கெடுக்கிறது. அது நுரையீரலை உஷ்ணமாக்குகிறது. சில வேளைகளில் அதை முழுதுமே தின்று மாமிசப் பிண்டம்போலாக்குகிறது. அது சுவாசாசயத்துள்ள உட்குழாய்களை விரியப் பண்ணிக் கெடுக்கிறது. நமக்குப் பிராணாதாரமாயுள்ள பிராணவாயுக்களின் அணுக்கள் நிறைந்து நமது தேகத்தினுள் ஓடிக் கொண்டிருக்கும் சுத்த இரத்தத்தைக் கெடுக்கிறது. மூளை, ஜீவாதார நரம்புகள் இவைகளின் மேற்றோலைக் கடிக்கச் செய்து உடல் நடுக்கம், பைத்தியம் முதலிய அநேக வியாதிகளை உண்டு பண்ணுகிறது. யாவராலும் ஆட்சேபிக்க முடியாததும் பிரத்தியட்சப் பிரமாணமாயுமுள்ள இவ் விஷயங்களை யெல்லாம் வாசித்தும் கேட்டும் சிந்தித்துமான பின்னர் நீ குடியில் வெறுப்படைவாயா? விருப்படைவாயா? வெறுப்படைவாயானால் அதைத் துச்சமாகத் தள்ளிவிட்டு நமது இராஜ்ஜியமே கண்டு நடுங்கும்படியான இந்தச் சத்துருவின் கெடுதல்களை உனது நட்பினர்களுக்கும் உறவினர்களுக்கும் எடுத்துரைக்க நீ சிறிதும் நாணமடையாதே" என்றார்.

இனி, மதுபான பழக்கம் உடையவர்களை யார் விடுவிக்க வேண்டும்? அன்னியரால் விடுவிக்க முடியாது. அரசர்களாலும் முடியாது. தேவர்களாலும் முடியாது. அன்புடன் மணம் புரிந்துகொண்ட மனைவியே விடுவிக்கவேண்டும். அல்லது ஆப்த சிநேகிதர்கள் விடுவிக்கவேண்டும். அறிவுடைய அவர்கள் மக்கள் விடுவிக்கவேண்டும். மணம் புரிந்துகொண்ட ஓர் மங்கை தன்னுடைய நாயகனது மதுபானப் பழக்கத்தை மாற்றி மாசிலாத குணமுடையோனாகச் செய்தாள். அக் கதையை அடியில் சுருக்கமாக எழுதுகிறேன்.

தென்னாட்டில் காவிரிநதி பாய்தலையுடைய ஓர் பட்டினத்தில் குடியானவன் ஒருவன் இருந்தான் அவன் பெயர் பாக்கியநாதன். அவன்கொஞ்சம் நிலமும் சிலமாடுகளும் இரண்டொரு வீடுகளும் உடையவனா யிருந்தான். அவனுடைய இருபத்தைந்தாவது வயதில் அந்த ஊரில் சில கட்குடியர்கள் அவனைச் சிநேகித்துக் கள்பழக்கத்தைச் சிறுகச் சிறுகப் பிறர் அறியாமல் பழக்கிவிட்டார்கள். ஆரம்பத்தில் பாக்கியநாதன் அவர்களது கட்டாயத்தால்



மருந்தினைக் குடிப்பதுபோல் மிக அருவருப்புடன் குடித்து, மானத்திற்குப் பயந்து வெகு இரகசியமாகக் குடித்து வந்தான். கள் குடித்த நாற்றம் தன்னுடைய கற்புடையாளுக்கும் தோற்றாதிருக்கும்படி லவங்கம் ஏலக்காய் முதலிய வாசனைப் பொருள்களை வெற்றிலைப் பாக்குடன் சேர்த்து வாய் மணக்குமென்று தின்று கொண்டிருப்பான் எனினும் பாக்கியநாதன் குடித்த கள் நாற்றத்தை வாசனைப் பொருள்கள் மாற்றவில்லை.

அன்புடைய அவன் மனைவி வேதவல்லி இதை யறிந்து கொண்டாள். தன் மனத்தில் எண்ணாத எண்ணங்களை எண்ணினாள். தன் தலைவன், தந்தை, மாமன், மூத்தோர், மாமி முதலான பெரியோர்களைக் கொண்டு மாற்றலாமா என்றும் முதலில் சிந்தித்தாள். தனது நாயகன் மானத்தைத் தானே கெடுக்கத் துணிந்தாள் என்னும் பழிக்குப் பயந்தாள். பிறர்க்குத் தெரிவிக்காமல் நாயகனைப் பிடித்திருக்கும் பெரும் பிசாசாகிய கட்குடியைத் தன்னுடைய அறிவென்னும் மந்திரத்தால் ஓட்ட நெடு நேரம் நீள நினைத்தாள். மணற்பாங்கில் தோண்டிய அளவில் ஊறும் தண்ணீரைப்போல அவளுடைய மனதில் அருமையான யுக்தி யொன்று உண்டானது. குடியானவன் மனைவியாகிய வேதவல்லி என்னும் கற்புடையாள் மறுநாளாகிய வெள்ளிக்கிழமை அதி காலையில் எழுந்து வழக்கம்போல் வீட்டின் வாசலைச் சுத்தி செய்து விட்டு, செப்புக்குடம், குங்குமம், மஞ்சள் முதலிய மாங்கல்யமாதுகள் அணிந்துகொள்ளும் மங்கல வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டு காவிரி நதிக்குப்போய் ஸ்நானஞ்செய்து மஞ்சள், குங்குமம் முதலிய வஸ்துக்களை யணிந்து ஒருமையுள்ள மனதுடையவளாய்க் கங்கையை நோக்கி, "கங்காதேவி! உன்னுடைய திவ்விய கருணையால் நீ அறிய எனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் இன்று முதல் ஒரு விரதத்தை அநுசரிக்கப் போகின்றேன். அந்த விரதத்தின் விபரம் அன்னத்தை அறுவகை ருசியோடு கூடிய பதார்த்த வகைகளுடன் இதுவரையில் புசித்து வளர்த்துவந்த இந்த உடலை இதோ உன்னெதிரில் குடிக்கும் மூன்று கை ஜலமாகிய உன்னுடைய நீரை அன்றி வேறொன்றையும் குடிக்காமலும் புசிக்காமலும் எனது நாயகனது துர்ப்பழக்கமாகிய மதுபானம் நீங்கும் வரையில் வாட்டிச் சுருங்கச்செய்வேன்"

என்று உறுதி மொழியைச் சொல்லி வீட்டிற்கு வந்தாள். வழக்கம்போல் சமைத்தாள். வீட்டிலுள்ள அனைவருக்கும் படைத்தாள். இரண்டொரு நாட்கள் கழிந்தன. வேதவல்லியின் முகமும் மற்ற உறுப்புக்களும் வாடி மெலிவை அடைந்தன. அவள் மனம் மாத்திரம் மெலிவை யடைய வழியில்லை.

அவள் நிலைமையை யறிந்த நாயகனும் மற்றவர்களும் அவள் ஏதோ வியாதியை யடைந்திருக்கிறாளென்று நினைத்து அவளைப் பல தரமும் கேட்டார்கள். அவள் ஒருவருக்கும் பதில் உரைக்காமல் முன்போல வீட்டின் ஊழியங்களை மனோ உறுதியுடன் சரிவரச் செய்து வந்தாள். அனைவருக்கும் அவள்மேல் இரக்கம் உண்டானது. ஒருநாள் வீட்டில் இருக்கும் அனைவரும் அவளைச் சாப்பிடும்படி பலவந்தப் படுத்தினார்கள். அவள் அதற்கிணங்காமல் மனோ உறுதியுடன் இருந்தாள். பட்டினியா யிருப்பதை யறிந்த அவள் புருஷனாகிய குடியானவன் அவள் தனியாகப் படுக்கை யறையில் இருக்கும்போது அவளை யடைந்து இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு இனிமையான வார்த்தைகளைப் பேசி "பெண்ணே! நீ என் பட்டினியாக இருக்கின்றாய்?" என்றான். பதில் சொல்லாமல் தலையை வணங்கிப் பூமியைப் பார்த்துத் தனது வலதுகால் பெருவிரலால் பூமியைக் கீறிக்கொண்டு தாமரை மலர்கள் போன்ற தனது இரண்டு கண்களிலிருந்து நீர் முத்து முத்தாகப் பூமியில் விழும்படியாகச் செய்து நின்றாள். அந்த நிலைமையை இரும்பினும் கல்லினும் வயிரத்தினும் கடினமான இருதயத்தை யுடையவர்கள் கண்டாலும் அவர்கள் மனம் அனல் கண்ட மெழுகைப்போல் உருகிவிடு மாதலால், தேவர்கள் சாட்சியாகத் திருமணம் புரிந்துகொண்ட அக் குடியானவன் மனம் கரையா திருக்குமா?

அவன் மனம் கரைந்தது. தன்னையும் அறியாமல் கண்களில் ஜலம் ததும்பச் சில நிமிஷம் நின்றுவிட்டான். பிறகு அவளைப் பார்த்து, "உன் மனதில் நிறைந்திருக்கும் துக்கத்திற்குக் காரணத்தைக் கொஞ்சமும் ஒளிக்காமல் என்னிடம் சொன்னால்; உயிரோடு கூடிய என்னுடைய இவ்வுடலை ஒருவருக்கு விற்றாவது உனது துக்கத்தைப் போக்கடிப்பேன். இஃது "சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!" என்று முக்காலும் சொல்லி அவள் எண்ணத்தைச் சொல்



லும்படி வெகு வினயமாய்க் கேட்டான். வேதவல்லி தான் நிதம் வழிபடும் கங்காதேவியின் கருணை உண்டானது என்று தன்னுடைய மனதில் எண்ணிக் குனிந்த தலையுடன், "என்னுடைய பிராணநாதர் ஒரு சண்டாளியின் வசப்பட்டுச் சத்தியத்தைக் கைவிட்டு அசத்தியரானார்" என்று தேம்பித்தேம்பி யழுதாள். அதைக்கேட்ட குடியானவன் "பெண்ணே! உனக்கென்ன பயித்தியம்? நான்தான் உனது பிராணநாதன், நான் உன்னை விட வேறொரு பெண்ணின் வசமும் ஆகவில்லை. உண்மை! உண்மை!! உன்னுடைய தப்பெண்ணத்தை விட்டு விடு" என்றான். வேதவல்லி, "ஐயோ! நான் என்ன சொல்வேன். அந்தப் பாவி என் கணவரைப் பொய் பேசும்படி செய்துவிட்டாளே" என்றாள். குடியானவன், "பெண்ணே! உண்மையில் எனக்கு ஒருத்தி சினேகமும் கிடையாது, அப்படிச் சினேகம் இருப்பதாக உனக்குத் தெரிந்ததாகச் சொன்னால் இந்த நேரத்திலேயே விட்டு விடுகிறேன்" என்றான். அவள் "நான் சொன்னால் தாங்கள் மனதார விரும்பி யிருக்குமவளை விட்டு விடுவீரா"? என்றாள். நான் அவசியம் விட்டு விடுகிறேன். இன்னாளென்று நீ சொன்னால்தான் நான் உன்னை விடுவேன் என்று கைகளைப் பிடித்துக் கொண்டான். அவள், "நாதா நான் சொன்னால் என்மேல் கோபங் கொள்ளப்படா" தென்றாள். அவன் "இல்லை, முக்காலும் இல்லை, சும்மா சொல்" என்றான். "நாதா, தாங்கள் சில காலமாக நம்முடைய ஊருக்கருகாமையில் தோப்பில் கட்டி யிருக்கும் குடிசைக்குள் நுழைவது இல்லையா?" என்றாள். அதைக் கேட்ட அவன் சற்றுநேரம் யோசித்து, "அடீ அது கள்ளுக்கடை, விபசாரியின் வீடல்ல" என்றான், "அந்த வீட்டில் தான் அவளைத் தினந்தோறும் நேசிக்கின்றீர்" என்றாள். குடியானவன் "பெண்ணே உன்னிடம் இப்பொழுது உண்மையைச் சொல்லுகின்றேன். அங்கே ஒரு பெண்ணுங் கிடையாது. நான் கள் குடிப்பதற்குத் தான் அங்கே போகின்றேன். அந்தக் கள்ளைத்தான் சண்டாளி யென்று சொல்லுகிறாயோ?" என்றான். அவள் இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிட்டு, "தாங்கள் அதைத் தான் விட்டு விடவேண்டும்" என்று கண்ணீர் தாரை தாரையாக ஒழுக நின்று சொன்னாள். குடியானவன் அறியாமை நீங்கி நல்லறிவு உண்டாகி, "எனது பிராண நாயகி நான் இது வரையில் [illegible]ண்டு வந்த துர்ப்பழக்கத்தை இன்றுடன் எல்லாம் வல்ல

சகவாறிய விட்டு விட்டேன்; நீ கவலை யொழித்துக் களிப்படைவாய்'' என்று உறுதி மொழிகளைச் சொல்லி மது பானத்தை யொழித்து விட்டான்.

ஆகையால் சகோதர சகோதரிகளே, ஒவ்வொருவரும் இந்த மதுபான சம்பந்தமான விஷயத்தில் முயற்சி எடுத்தால் நம்முடைய தேசமாகிய பாரத நாடு நல்லொழுக்கங்கள் பரவி முன்னேற்ற மடைவதற்குச் சிறிதுஞ் சந்தேகமே யில்லை.

மதுபானிகள் நாளை நாளை யென்று சொல்லாமல் யாவரும் ஒற்றுமைப்பட்டு எல்லாக் குடிவகையையும் நீக்கி நல்லொழுக்கத்தைக் கொள்ளுவாராக.—தமிழகம்.

---

# ஒழுக்கத்தாலன்றி யுயர்வில்லை

பரந்த பூமியின்கண் தோன்றி யழிந்த பிரஜைகளாயினுஞ் சரி, இப்போது வாழ்ந்துவரும் நாட்டார்களேனுஞ் சரி, உயர்வடைந்ததும் உயர்வடைவதும், ஒழுக்கத்தினாலே யென்றும், அழிந்ததும் அழிந்துகொண்டிருப்பதும், ஒழுக்கக் குறைவாலே யென்றும், சரித்திர நிகழ்ச்சிகளை நிதானித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

பூமியின் ஒரு பாகத்தில் ஒரு பகுதியாரை மாத்திரம் யெடுத்துக்கொண்டாலும் அதே உண்மை புலப்படுகின்றது.

அய்மட்டோ! ஒரு நாடு ஒரு நகரம் ஒரு கிராமம், அதனதன் கடந்த சிறப்பும், நிகழும் சிறுமையும், ஒழுக்க ஏற்றக் குறைவாலே உண்டாகின்றன.

இவ்வகையாக நோக்குழி எத்தனையோ சந்தேக விபரீதங்களுக்கும் ஆட்சேபனைகளுக்கும் தக்க சமாதானம் காணலாம்.

குறிப்பிட்ட ஒரு மரபினருள் 100 ல் 50 பேர் ஒன்றுமறியவியல்பில்லாதவர்களாக நீக்கி, மிச்சம் 50 பேர்களில் எவ்வளவிற் கெவ்வளவு உண்மையொழுக்க விகிதம் மேலிடுகிறதோ, அவ்வளவிற் கவ்வளவு அந்த வகுப்பார் முன்வந்தவர்களாவார்கள்.



இதுகாரணம் பற்றியேதான் அதிக எண்ணுள்ள சாதியார் தாழ்ந்தவர்களாக நிற்கின்றார்கள். அதிக எண்ணுடையாரிடம், ஒழுக்கம் அமைந்த அதிக பேர்களைக் காண்பது அரிது. சுலப எண்ணிக்கை யுடைய சாதியாரிடம் ஒழுக்கமுடையோர் சுலபமாயினும், அந்த வகுப்பின் மொத்தத் தொகையை நோக்க, விழுக்காடு அதிகமாகவே யிருப்பதைக் காணலாம்.

நிற்க, சொற்ப எண்ணுடைய இந்த இந்த வகுப்பார்; முன்னேற்றம் அடையவில்லை யென்றால் இருக்கலாம். அதற்குக் காரணம் அவ்வகுப்பினரிடம் ஒழுக்கக்குறைவே என்று கொள்ள வேண்டும்.

இந்த உண்மையை யன்றோ சுருக்கமாக,—

"இல்லை யொழுக்கமிலான் கண் உயர்வு" திருக்குறள்

எனப்பெரியார் அருளியுள்ளார்கள்.

எனவே, நமது மரபினர்கள் அதிக எண்ணுடையவர்களாயின் அதற்கேற்ற பெருமுயற்சி செய்து நாலா துறைகளிலும் அதிகமதிகம் பேர்கள் மேம்பாடுடைய உண்மைச் சீலர்களாலன்றி, நமது முன்னேற்றம் நூலளவும் பேச்சளவுமேயாம்.

நம்மவரைப் போன்ற பெரும் வகுப்பினரை முன்னுக்குக் கொண்டுவருவது சுலபமல்ல எனினும் எளிதான காரியத்தைச் செய்து முடிப்பதில், என்ன பெருமை? நமது முன்னோர்கள், அரும்பெருங் காரியங்களைச் செய்தவர்களானால், எதற்காக? நமக்காகவும், அவர்களைப்போல் நாமும் செய்வதற்காகவோ? அல்லது அவர்கள் பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு நாம் தூங்கி விழுவதற்கும் கூச்சல் போடுவதற்காக மாத்திரமோ? யோசிக்க வேண்டும்.

ஆகையால் நல்லொழுக்கத்தில் நமது கண்ணுங் கருத்தும் பதிய வேண்டும். முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வருபவர்களிடத்தில் முதன்முதல் நல்லொழுக்கவொளி வீசவேண்டும். இல்லாவிட்டால் உலகம் இலேசாக அன்னார்களை மதித்தே விடும்.

இவைகளைப்பற்றி, நாலா துறைகளிலும், விபரமாக நமது மித்திரனில், பல பெரியோர்கள் எழுதிக்கொண்டு வருவதைப்

பார்க்க, வருங்காலத்தில் நம்பிக்கையும், மனத்தில் தைரியமும் உதிக்கின்றன.

ஒழுக்க மென்று லென்ன? மனம், வாக்கு, காயம் இவைகளின் அடக்கம், தூய்மை, நேர்மை, உறுதி முதலிய நற்குணங்களமைந்த வாழ்க்கை. இவைகளை நம்மிட மமைத்துக்கொள்ள வேண்டும். அமைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஏற்கெனவே உள்ள தெனவும், சமயா சமயங்களில் பார்த்துக்கொள்ளலா மெனவும், நினைந்து, நம்மையே நாம் ஏமாத்திக் கொள்ளலாகாது. கரார் வில்லைப்பற்றி பெரியார் எழுதிய வியாசப் பகுதி மிக்கபொருத்த மானது. நமது வார்த்தைகளில் நிலையில்லாமல் செய்துவிடுவது, "தன் மதிப்பின்மை"க்கு அடையாளம். தன் மதிப்பில்லாரைப் பிறர் மதிப்பதெப்படி? பிறர் என் மதிக்கவேண்டும்?

இவைகளை யெல்லாம் "மித்திரன்" வாயிலாக எடுத்துக் காட்டும் காலம் வந்திருப்பதே நற்காலத்தின் அறிகுறியாகும்.

குணங்களைச் சம்பாதிப்பது முக்கியமாக இக்காலத்தில்—மன உறுதியுடையோர்களுக்கே யன்றி, ஏனையோர்களுக்குக் கை கூடுவது கடினம். எனினும் மன உறுதியுடைய நல்லோர்களாக வெளிவர வேண்டியதும் இயல்பும் ஒழுக்கமு முடையோர் கடமையே யாகும். அன்றேல், எத்தனை காலம் சீர்கெட்டுக் குலைந்து நிற்பது? எத்தனை பேர்களால் ஏளனம் செய்யப்பட்டுத் தலைகுனிந்து போவது? என்பதை (வீரர்களுடைய சந்ததியாரானால்) நன்கு யோசிக்கவும்.

முன்னோடிகளாக விருப்பவர்களிடத்தில் பட்டங்கள் வேண்டியதில்லை—(காந்தி யடிகளிடம் என்ன பட்ட முளது?) நற்செய்கைகளிருந்தால் போதும். பின் வருபவர்கள் சிரமமின்றிச் சில வேளைகளில் சிரமத்தையும் பாராது, உடன் தொடருவார்கள். வழி காட்டிகளாக நடப்பவர்களுக்குக் கஷ்ட நிஷ்டூரம் வருவது சகசம். ஆனால், அவர்களுக்கே பேறும் புண்ணியமும்! "அன்ன மிடுவது பொருளுள்ளார் யாவராலும் செய்யக் கூடியது—உண்மையைப் போதிப்பது நல்ல அறிவு வொழுக்க முடையோர்களாலேயே முடியும்" என்று தற்காலப் பெரியாரொருவர் உபதேசித்துள்ளார். இது நன்கு பாராட்டத்தக்க உபதேசமாகும். பிறருக்கு நாம்



வழிகாட்டிகளாக இருப்பதானால் எத்தனை குணக்கேடுகளை நீக்கியவர்களாக விருக்கவேண்டும்!

"இவ்வளவு பெரிய வேலையா? நமக்கு வேண்டாம்" என்று தங்கள் தங்களை விலக்கிக்கொள்வதற்காக அல்ல இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்லுவது. இந்தப்பெரும் வேலையில் அசட்டையாயிராமல், விடா முயற்சியுடன் உழைக்கவேண்டு மென்பதைக் குறிப்பிடுவதற்கேயாகும்—நல்லொழுக்கம் நமது இயற்கையாக அமைந்து விடவேண்டும். வீட்டு விவகாரம், தொழில் முறை முதலிய பல சிறு காரியங்களிலேயே நமது நல்லொழுக்கம் திகழ வேண்டும். பிரதி தினமும் நம்மை நாமே கவனித்து: இன்று என்ன குற்றத்தை நம்மிடமிருந்து கடிந்தோம்? என்ன குணத்தை வளர்த்தோம்? அதற்காக முயற்சியாவது எவ்வளவு தூரம் செய்தோம்? இனிமேலாகிலும் செய்யவேண்டாமா? என்ற விசாரணை செய்துகொண்டு வரவேண்டும். இதற்காக எம்பெருமானைப் பிரார்த்திக்க வேண்டும். நமக்கோ பல விவகாரங்கள் பல பல வகையில் விரிந்துகிடக்கும். ஆங்காங்கும், நம் மனத்திற் கொளிக்காமல், நேர்மையாக நிற்க பிரயாசைப்பட வேண்டும்.

இந்தப் பெருந்துறையி லிறங்குவது முதலில் கஷ்டமாகத் தோன்றினும், பிறகு போகப் போக அளவிலா நன்மை பயக்கு மென்பதிற் சந்தேகம் வேண்டியதில்லை. இத்தகைய பெரு நெறி பிடித்தொழுகிய வீரர்களாகும் நமது முன்னோர்கள். அவர்கள் பெயரை முன்னுக்குக் கொண்டுவருவதற்கு, அதாவது நாமும் நமது சமூகமும் முன்னேற்றமடைய வேண்டுமானால், உள்ளும் புறமும் நல்லொழுக்கத்தைக் கைக் கொள்ளுவோம். ஏனெனில்,—

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

திருக்குறள்

இத் திருவாக்கின் பிற் பகுதியே இப்போது இதுவரையில் நம்மிடத்தில் பலித்து வந்தது. இனியேனும் முதல் பகுதி பலிக்குமாறு நடந்து கொள்ளவேண்டியது அவசியத்திலும் அவசியம்.

இம்மாதிரி பொதுவாகச் சொல்லுங்காலையில் அநேகர் தங்களைக் குறிப்பிடுவதாகக் கொள்வது மிகவும் தப்பு—நாம் கைக்கொண்ட காரியத்தில் வெற்றி பெறுவதற்கு நம்மிட மிருக்க

வேண்டிய கருவிகள் இன்ன இன்ன என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வந்ததே அன்றி, இதைக்கண்டு மனமிடையும் நண்பர்களுடைய உள் இருக்கும் குற்றங்களைப் பார்த்துச் சொல்ல வந்தேனில்லை.—ஆ. வே. முத்தையன்.

குறிப்பு:—நமது ஸ்ரீமான் A. V. முத்தைய முதலியார் B.A., B.L., (Secretariat General Pondicherry, F.R.) அவர்கள் எழுதும் வியாசங்கள் ஒவ்வொன்றும் அறிவுடைய மேன்மக்களால் போற்றும் புலவர்கூட்டவிருந்தாகும். முதலியார் அவர்கள் செய்து போதரும் பொருப்பான வேலைக்கிடையில் தம் குல சம்பந்தமாக அவர்கள் கொண்டிருக்கும் அரியபெரிய நோக்கங்களை அடிக்கடி எழுதிவருவது செங்குந்த குலமக்கள் கவனிக்கத் தக்கதாகும்.—ஆசிரியர்.

---

# காஞ்சி மகாநாட்டின் கடமை

## பிரசாரம்

பகுதி 2 பக்கம் 77 தொடர்ச்சி

நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வொரு பட்டினங்களிலும் கிராமங்களிலும் கிளைச்சங்கங்கள் அமைத்தல் அவசியமென்பதைப் பற்றியும், செங்குந்தமித்திரனை ஒவ்வொருவரும்படித்தல் வேண்டுமென்பதைப் பற்றியும், இவைதாம் நமது முன்னேற்றத்திற்கு முக்கிய சாதனங்கள் என்பதைப் பற்றியும் விளக்கிக் காட்டுவது இன்றியமையாததாதலால் சுயநலமற்றுச் சமூக முன்னேற்றத்தில் சிரத்தையும் ஊக்கமும் கொண்டுள்ள சிலரையாவது சுற்றுப்பிரயாணம் சென்று பிரசாரம் செய்யும்படி சங்கத்தார் ஏற்பாடு செய்தல் வேண்டும். சமூக முன்னேற்றத்திற்கு அவசியம் வேண்டப்படுவதாய சங்கம், பத்திரிகை முதலியவற்றிற்கு அடிப்படையாயுள்ளது பிரசாரமேயாகும் என்பதைக் குறித்து ஐயுறுவார் ஒருவருமில்லை. ஆகையால் நமது சங்கம் முதலாவதாகக் கவனிக்கவேண்டியது பிரசாரமாகும். பத்திரிகை வாயிலாக முயறல்போதாதோவெனில் போதாது. பத்திரிகை முதலியவை மிகப் பயன்தரவல்லனவாயினும், தக்கவர் ஆங்காங்கு நேரில்சென்று செய்யும் பிரசாரம் அவற்றினும் பன்மடங்கு மிக்க பயன்தருமென்பது எவரும் அறிந்ததொன்றும். பெரும்பாலோர் கல்வி யில்லாதவராயிருத்தலின் சிலரே பத்திரிகையைப் படிக்கக்கூடும். பிரசாரமோவெனில் படிப்பவர்க்குப் படிக்கும் விஷயங்கள் மனத்தில் நன்கு வலியுறுமாறும் படியாதவர்க்கு அவைகள் நன்கு விளங்குமாறும் செய்யவல்லதாம். பிரசாரகர்கள் சுற்றுப் பிரயாணஞ் செய்துகொண்டே மித்திரனுக்குச் சந்தாதார்களைச் சேர்ப்பதுடன் ஆங்காங்கு கிளைச்சங்கங்களையும் அமைத்து வருதல்வேண்டும். பிரசாரத்தில் முதலாக நாம் முயன்றாலன்றி நமது கிளர்ச்சி சீக்கிரத்தில் ஜெயமடையாது. பிரசாரத்திற்குத் தக்க பெரியோர்களும், பொருளும் வேண்டுமாதலின் போதிய பொருளாதார மில்லாத தலைச் சங்கத்தையே இப்போது எதிர்பாராது அதன் நோக்கத்திற்கிணங்க குமரி, கோட்டாறு, திருவனந்தை, நெல்லை, அம்பாசமுத்திரம், கள்ளக்குறிச்சி, தென்காஞ்சி, புளியங்குடி, சிந்தாமணி, சங்கரன் கோயில், மதுரை, திரிசிரபுரம், முசிரி, துறையூர், தஞ்சை, திருவாரூர், நாகை, திருமலைராயன் பட்டினம், காரைக்கால், திருமருகல், மஞ்சட்கொல்லை, காஞ்சி, தணிகை, திருவேங்கடம், குடியேற்றம், முதலிய நம்மவர் ஜனப்பெருக்குள்ள இடங்களிலுள்ளவர்கள் சுற்றுப் பக்கங்களில் தாங்களே பிரசாரஞ்செய்து கிளைச்சங்கங்கள் அமைத்து, நமது பத்திரிகைக்குச் சந்தாதாரையும் பெருக்குதல் உசிதமாகும்.



## கல்வி

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"
திருக்குறள்

என்பது நூலோரும் மேலோரும் கொண்ட கொள்கையாகலின் கல்வியாலுண்டாகும் மேன்மை சொல்லாமலே விளங்கும். கல்வியே இம்மைக்கும் மறுமைக்கும் ஒருங்கே துணையாவது.

கல்வி, அறிவிற்குக் காரணமாகும். அறிவு ஒழுக்கத்திற்குக் காரணமாகும். ஆதலின் விழுப்பந்தரல் கருதி உயிரினும் ஓம்பப்படுவதாய ஒழுக்கத்திற்கும் கல்வியே அடிப்படையென்பதை அறியாதாரில்லை. கற்றோரே உயர்ந்தோர்; கல்லாரே தாழ்ந்தோரென்பது இத் திருக்குறளின் கருத்தாதலின், கற்றோர் நிறைந்த

சமூகமே உயர்ந்ததென்றும் கல்லார் நிறைந்த சமூகமே தாழ்ந்த தென்றும் அறியக்கிடக்கிறது.

"கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்"

என்றும்,

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்"

என்றும், மறையோதியும் அவ்விழிய தொழிலாகிய இரத்தலும் கல்விப்பொருட்டாயின் செய்பலாமென அதனால் ஒருவனுக்கு உண்டாகும் சிறப்பு நோக்கியன்றோ மேலோர்,—

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" வெற்றிவேற்கை

எனப் பணித்தார். ஆகையால் நாம் முன்னேற்றமடைய வேண்டுமானல், நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டியது கல்வியைக் குறித்தே. கல்வியில் பிற்பட்டுள்ள வகுப்புக்களுள் நமது வகுப்பும் ஒன்றாக அரசாங்கக் கணக்கில் கிடத்தலால் கல்வித் துறையில் முன்னேற்றமடைய நாம் காலதாமதமின்றி பெருமுயற்சி செய்ய வேண்டி யிருக்கிறது.

கவிச்சக்கரவர்த்தியைப்போன்ற அளவிலாற்றலும் புலமையும் வாய்ந்த பல சீரியர் தோன்றிய மரபைச்சார்ந்த இளைஞர் தக்கபடி பயில்விக்கப்படுவாராயின், இக்காலத்து மேதாவிகளாய் விளங்குவரென்பதிற் சந்தேகமுண்டோ. நம்மவர் வதியும் ஒவ்வோரூரிலும் கட்டாயக்கல்வி ஏற்படுத்துவதுடன் கல்வியில் மேன்மேலும் ஊக்கமுள்ள இளைஞர்கள் உயர்தரக்கல்வியும் தொழிற்கல்வியும் கற்குமாறு வேண்டிய சௌகரியங்கள் செய்தல் வேண்டும்.

ஊக்கமுள்ள பல இளைஞர் தம் வறுமையால் ஊக்கமிழந்து கொம்புதேனுக் காசைப்படும் முடவனைப்போல் தயங்குகின்றனர், என்பதை பலர் அறிந்திருக்கலாம். அன்னோர்க்கு உண்டியும் உறையுளும் உதவுவதற்கு முக்கிய பட்டணங்களில் ஹாஸ்டல்கள் அமைத்தலோடு உபகாரச் சம்பளமும் தர நிதிசேர்க்க முயல வேண்டும். உபகாரச் சம்பளத்திற்காகவும் பிறவற்றிற்காகவும் சேர்த்துள்ள நிதியானது குறையாது என்றும் பலர்க்குதவுமாறு, உபகாரச்சம்பளம் முதலியவை பெறுவோரிடம் தாம் இவ்வாறு



பெற்றத் தொகையைப் பிற்காலத்தில் சிரமமின்றிப் பல தடவைகளில் திருப்பிக் கொடுத்துவிடுமாறு உடன்படிக்கைச் செய்து கொள்ளல் நலமாகும். நாளடைவில் நமது சங்கநிதி பெருகுமாயின் அவசியமான இடங்களில் உயர்தரக் கல்விச்சாலைகளும் கல்லூரிகளும் அமைத்தல் வேண்டும். தற்காலத்தில் பாஷாக்ஞான மாத்திரமுண்டாக்கும் (அதுவும் பெரும்பாலும் அந்நியபாஷை) கல்வியைக் கற்பதில் காலத்தையும் பொருளையும் செலவிட்டு பிற்காலத்தில் அரசாங்க உத்தியோகம் வக்கீல் உத்தியோகம் முதலியவை தவிர வேறெந்தத் துறையிலும் பிரவேசிக்க இயலாதவராய் வருந்துகிறார்களாகையால் தற்காலம் பெறக்கூடியதுபோன்ற கல்வியிலேயே நம்மிளைஞரைக் காலங்கழிக்க விடலாகாது. கல்லூரியைவிட்டு வெளிப்போந்தவர் உலகில் பல துறைகளிலும் சென்று தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு சேவைசெய்யும் திறமையுடையவராகுமாறு வைத்தியம், சிற்பம், இயந்திரம், பலவகைக் கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் முதலிய பல்வேறு பட்டத்துறைகளுள் அவ்வவருக்குப் பிடித்தமான துறையில் பயிலுமாறு உதவி செய்யவேண்டும். இவற்றிற்கெல்லாம் வேண்டிய சௌகரியங்களை அரசாங்கத்தார் உதவிகொண்டும் நமது முயற்சி கொண்டும் செய்துகொள்ள வேண்டும். நமது சங்கநிதி இடந்தருமாயின், நமது சங்கமே ஒரு சர்வகலாசாலை அமைத்துப் பல துறைக் கல்விகளையும் கற்பித்தல் சிறந்ததாகும். இவையாவும் நாம் இலேசாகச் செய்யக்கூடியவை என்றே துணிவாகச் சொல்லலாம்; வேண்டியது பொருள் ஒன்றே. அதுவும் நாமெல்லாம் பிரிவின்றி ஒன்றுபட்டுழைப்போமானல் அசாத்தியமானதல்ல வென்பதை நம்மவர்கள் பெருங்கூட்டமாய் ஒரு மனப்பட்டுள்ள ஊர்களின் நடவடிக்கையை அறிந்தோர் நன்குணர்வர்.

## சங்க நிதி

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை"

திருக்குறள்

என்னும் அருமறைவாக்கை நாம் மறக்கலாகாது. பொருளல்லவரையும் பொருளாகச் செய்யவல்ல பொருள் பெற்றார்க்கு இவ்வுலகில் கைகூடாததொன்றுமில்லை என்பது அநுபவசித்தமாதலால் அதனை யீண்டு விவரிப்பது அவசியமன்று. அத்தகைய பொருளை

அளவிறந்தபடி சில வருஷங்களுக்குள் சேர்க்கவேண்டுமெனின் நாம் சரியான வழியில் உழைத்து ஜனங்களுக்குச் சங்கத்தினிடத்து நம்பிக்கை பூரணமாயுண்டாகுமாறு முதலில் அரசாங்கப் பதிவு வேண்டும்.

## சட்ட சபை முதலியவை

கல்வி,செல்வம் முதலிய பலவகையிலும் பிற்பட்டுள்ளநமக்குக் குறைபாடுகள் மிகப்பலவுள. அவற்றைச் சமயம் வாய்த்தபோது எடுத்துக் காட்டி நிவர்த்தித்துக்கொள்ள நம்பிரதிநிதிகள், சட்டசபை, ஜில்லா, தாலுக்காபோர்டுகள், முனிசிபாலிடி, யூனியன்,பஞ்சாயத்துக் கோர்ட்டு முதலிய ஸ்தாபனங்களில் இருத்தல் அவசியமாகும். மாண்டேக் செம்ஸ்போர்டு சீர் திருத்தம் நம் நாட்டிற்குக் கிடைத்து சுமார் ஏழு வருஷங்களாகியும் சட்ட சபையில் இதுகாறும் தேர்தல் மூலமாகவாவது நாமினேஷன் மூலமாகவாவது ஒருவரும் வந்தாரில்லை. நாமினேஷன் மூலமாய் நம்மிலொருவரையாவது நியமிக்கும்படி அரசாங்கத்தாரையும் இதுகாறும் கேட்டாருமில்லை, அழுதபிள்ளைக்கன்றோ பால் கொடுக்கப்படும். கேட்டோர்க்கே கொடுக்கப்படுகிறது. இதில் அரசாங்கத்தாரைக் குறை கூற இடமில்லை. கேட்பதற்கே ஆளில்லையென்றால் நியமிக்கத்தக்க யோக்கியதை யுள்ளவர் இல்லையென்று அரசாங்கத்தாருக்கு யாராவது உபதேசிக்க வேண்டுமோ.

"கேட்பின் கொடுக்கப்படும் தட்டினால் திறக்கப்படும்" என்னும் முதுமொழியை கவனித்துச் சட்டசபை முதலிய ஸ்தாபனங்களில் நமது பிரதிநிதிகளை நியமிக்கும்படி பன்முறை சங்கமூலமாய்க் கேட்கவேண்டும்.

## ஐக்கிய நாணய சங்கங்கள்

நம்மவருள் பெரும்பாலார் நெசவுத்தொழில் செய்வோராதலால் அத்தொழிலை ஐக்கிய நாணய சங்கங்களால் விருத்தி செய்வதன்றி அதிக லாபமும் பெறக்கூடுமென்பதை இன்னும் பலர் அறிந்து கொள்ளவில்லை என்றே தெரிகிறது. சங்கச்சார்பாக ஐக்கியநாணய சங்கங்கள் அமைத்து நமது சங்கத்தின் அங்கத்தினர் மாத்திரமே அவற்றிற் சேரலாம் என்னும் நிபந்தனையோடுழைப்போமானால் நமது சங்கத்திற் சேராது புறம்பாயுள்ளவர்



களுங்கூட தமக்குண்டாகும் லாபத்தைக்கருதி அங்கத்தினராவார்கள். நெய்வோரிடமிருந்து விற்போரிடம் சரக்குச் செல்லுமுன் பல கைகள் மாறுவதால் அதன்விலை நூற்றுக்கு 25 அல்லது 30 வீதம் ஏறுகிறது. இவ்வாறே நூல் முதலியவை நெய்வோரிடம் வந்து சேருமுன் பல கைகள் மாறி விலை ஏறுகிறது. தேவையான நூல் முதலியவற்றை ஐக்கிய நாணயசங்கங்கள் மூலமாய்த் தருவித்துக் குறைந்த விலைக்குக் கொடுத்தலும் தயாரான சரக்குகளை வெளியூர்களுக்கு உள்ளூர் விலையை விட அதிக விலைக்கு விற்றலும் நெய்வோருக்கு மிக்க ஊதியந் தருவதன்றி நூல் முதலியவற்றைச் சேகரிக்கவும் தயாரான சரக்குகளை விற்கவும் செலவிடும் காலமும் கூடிவரும்.

இதுவன்றிச் சொற்பத் தொகையுள்ளப் பல பங்குகள் சேர்த்துப் பல பெருங் கம்பெனிகள் ஸ்தாபித்து வர்த்தகம் முதலியவை செய்தலுங் கூடும். இப் பெருங்காரியங்கட்கெல்லாம் அடிப்படையாயுள்ளது ஒற்றுமையே என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

## வழக்கு

நமக்குள் உண்டாகும் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளக் கருதி, தமக்குக்கிடைத்த அப்பத்தைத் தாமே பகிர்ந்து கொள்ளத் திறமையற்ற பூனைகளைப்போல், வக்கீல்களிடம் சென்று கோர்ட்டில் வழக்குத்தொடுத்து வக்கீல்களுக்கும் மற்றையோருக்குமாகப் பணத்தைப் பரிகொடுத்து இறுதியில் இருதிறத்தாரும் வெறுங்கையராய் கடனும் பட்டு, நின்று தவிப்போர் பலர் உளர். இத்தகைய அறிவீனமானவற்றைச் செய்து கெடாதபடி நமக்குள் உண்டாகும் வழக்கு விவாதங்களைத் தீர்த்துக்கொள்ளுமாறு நமது சங்கக்கச்சார்பாகவே பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்தல் வேண்டும்.—தொடரும்.

குறிப்பு:—இக் கட்டுரையை செங்குந்த குல மக்கள் ஒவ்வொருவரும் விடாது தொடர்ந்து வாசித்து உண்மை காணுதல் வேண்டும்.—ஆசிரியர்.

# காந்தியடிகள் நல்லுரை

["நவசக்தி"யிற் கண்டது]

பிரமசரியத்தைப் பற்றியும், அதனுடன் தொடர்புள்ள விஷயங்களைப் பற்றியும் மகாத்மாகாந்தி "எங் இந்தியா"வில் எழுதிய கட்டுரைகள் ஆங்கிலத்தில் புத்தக வடிவில் வெளியிடப் பட்டிருக்கின்றன. இப் புத்தகம் பிரசுரமாகி ஒரு வாரத்திற்குள் முதற் பதிப்புப் பிரதிகள் அவ்வளவும் செலவழிந்து விட்டமையால் இப்போது இரண்டாம் பதிப்பு வெளியாகி யிருக்கிறது. இவ்விரண்டாம் பதிப்புக்கு முன்னுரையாக, மகாத்மா காந்தி, புலனடக்கம் பெறவிரும்புவோருக்குப் பயன்படக் கூடியவை யென்பதாகக் கீழேகண்ட யோசனைகளைக் கூறியுள்ளார்.

1. நீர் இல்லறம் மேற்கொண்டவரா யிருப்பின், உமது மனைவி உமக்குற்ற தோழியும், துணைவியும், உமது தொண்டில் சகாவுமாவாள் எனக் கருதுவீராக. அவளைச் சிற்றின்பத்துக்குரிய கருவியாகக் கருதல் ஒழிக.

2. புலனடக்கம் மனிதனுக்குரிய இயற்கைச் சட்டம். ஆதலின், கணவன் மனைவி இருவரும் விழையும்போது மட்டுமே சிற்றின்பத்துக்குரிய சேர்க்கை தகும். அதுவும், இருவரும் (காம மயக்கத்தில் ஆழ்ந்திராது) தெளிந்த சிந்தையினரா யிருக்கும் போது ஏற்படுத்திக்கொண்ட ஒழுங்கு முறைக் குட்பட்டே நடைபெறல் வேண்டும்.

3. நீர் விவாகமாகாதவரா யிருப்பின், உமது தூய்மையைப் பாதுகாத்தல் உமக்கும் சமூகத்தும், இனி வரப்போகும் உமது வாழ்க்கைத் துணைவிக்கும் நீர் செலுத்தவேண்டிய தலையாய கடமையாகும். இந்தக் கடமையுணர்ச்சியைப் பேணி வந்தீராயின், அதுவே எல்லாச் சோதனைகளிலிருந்தும் உம்மைப் பாதுகாக்கும் சிறந்த கேடயமாயிருத்தல் காண்பீர்.

4. ஆண்டவனை நாம் கண்ணால் பாராவிடினும் நமக்குள்ளே இருப்பதாக உணர்கிறோம். எனவே, கட்புலனாகாத அந்த சக்திக்கு உமது மனதிலெழும் ஒவ்வொரு அசுத்த எண்ணமும் தெரிய



வரும் என்பதை மறவாது எப்போதும் சிந்தையிலிருத்தும். அச் சக்தியே அப்போது உமக்குத் துணை புரிவதைக் காண்பீர்.

5. புலனடக்க வாழ்வுக்குரிய விதிமுறைகள் இந்திரிய சுகாநுபவ வாழ்க்கைக்குரிய விதி முறைகளுடன் மாறுபட்டேயாதல் வேண்டும். எனவே, புலனடக்க வாழ்வுக் கியைந்த வண்ணம் நீர்பழகும் சங்கம், உமது படிப்பு, உணவு, களியாட்டு முதலியவற்றை ஒழுங்கு படுத்திக் கொள்வீராக.

எப்போதும் சத்சங்கத்தைத் தேடுவீர்; தூயவர்களுடனேயே பழகுவீர்.

காமக்கிளர்ச்சியைத்தரும் புதுக்கதைகள், சஞ்சிகைகள் முதலியவற்றை அறவே விலக்கி மனித வர்க்கத்துக்கு உறுதுணையாயுள்ள நூல்களையே படிப்பீர். அவற்றுள் ஒரு நூலை வாழ்க்கையின் பற்றுக் கோடாகக் கொண்டு பிரியாத் துணையாகப் போற்றி வருவீர்.

நாடகங்கள் சினிமாக்கள் இவற்றிற் கருகிலும் போகாதிருப்பீர். அதற்குப் பதிலாக, ஆன்மாவைப் பரவசப்படுத்தும் பகவந் நாமமும் சங்கீதமும் நிலவும் பஜனைக் கூடங்களுக்குச் செல்வீர்.

நாப்புலனைத் திருப்தி செய்வதற்காக அன்றிப் பசிக்காக மட்டும் உணவருந்துவீர். புலன்களுக் கடிமையான மனிதன் சாப்பிடுவதற்காகவே உயிர் வாழ்கிறான். புலனடக்கம்பெற்ற மனிதனோ உயிர்வாழ்வதற்காகவே சாப்பிடுகிறான். ஆதலின் கிளர்ச்சி தரக்கூடிய மசாலை, தாளிதங்களையும், சாராய வகைகளையும், அபினி புகையிலை முதலிய 'மயக்கப்பொருள்களையும் அறவே யொழித்து விடுவீர். உணவின் அளவையும் வேளையையும் ஒழுங்குபடுத்திக் கொள்வீர்.

6. இந்திரியங்கள் உம்மை மீறிவிடும்போலிருக்கும் போதெல்லாம் ஆண்டவனிடம் சரணாகதியடைந்து அவனுடைய அருளை இறைஞ்சுவீராக. இராம நாமத்தின் துணையைக் கோரி நான் எப்போதும் ஏமாற்றமடைந்ததேயில்லை. வெளிப்படையான [illegible] ஆசனஸ்நானத்தைக் கைக்கொள்ளலாம். அதாவது [illegible] நீர் நிரம்பிய தொட்டியில் கால்கள் வெளியே யிருக்கு

மாறு விட்டு உட்காரும். காமக் கிளர்ச்சி உடனே நீங்குவதைக் காண்பீர். நிரம்ப பலவீனமாயிருந்து ஜலதோஷம் உண்டாகி விடுமென்ற பயமிருந்தாலன்றி சில நிமிஷ நேரம் இவ்வாறு உட்கார்ந்திருக்கலாம்.

7. அதிகாலையிலும், இரவில் படுக்கப் போகும் போதும் திறந்த வெளியில் வேகமாக நடக்கும் பழக்கத்தைக் கைக் கொள்ளும்.

8. இரவு 9 - மணிக்கு உறங்கச்சென்று காலை 4-மணிக்கு எழுந்திருத்தல் மிக நல்ல பழக்கமாகும். எப்போதும் வெறும் வயிற்றுடனேதான் படுக்கச் செல்லவேண்டும். ஆதலின் கடைசி முறை உணவு மாலை ஆறு மணிக்குள் முடிந்து விடல் வேண்டும்.

9. மனிதன் ஆண்டவனுடைய பிரதிநிதி என்பதை எப்போதும் நினைவில்வையும். உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் தொண்டு செய்வதின் மூலம் ஆண்டவன் அன்பையும் பெருமையையும் வெளியிடுவதே மனித வாழ்க்கையின் தனிப்பெரு நோக்கமாகும். தொண்டினால் வரும் ஆனந்தம் ஒன்றையே பெறற்கரும் ஆனந்தமாகக் கருதுவீர். அப்போது வாழ்க்கையில் வேறு சுகம் எதுவும் உமக்குத் தேவையிராது.

---

# குடும்ப வைத்தியம்

வில்வ வேரைக் கஷாயமிட்டுக் கொடுக்க அஸ்திஜுரம் வெட்டை ஜுரம் போம்.

சுக்கு, கோஷ்டம், தேவதாரு, கடுக்காய், பற்பாடகம், சிறு தேக்கு வகைக்கிரண்டு பைசாவுக்கு வாங்கி இடித்துக் கஷாயமிட்டுக் காலை மாலை யரைக்கால் சேர் கொடுத்துவர நடுக்கல் ஜுரம் குணமாகும்.

கற்றாழைச் சோறும் உப்பும் பிசைந்து கட்டினால் நாய் கடித்த விஷம் நீங்கும்.

---

208433